# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 98 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 21ஆம் திகதி திங்கட்கிழமை

(07.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 12, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


## கமெண்ட் கந்தர்...

கிரிக்கெட் விளையாடுறதைத் தவிர மத்த எல்லாத்தையும் நல்லாவே செஞ்சிருக்கிறாங்கள்...!





## உஷ்

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக பணியாற்றும் மிலிந்த மொரகொட தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ரணில் அரசின் வெளிநாட்டு கொள்கைகளை கையாள்பவர்களுடன் பணியாற்றுவது கடினம் என்ற காரணத்தினால் மிலிந்த விலகுவதாக பேச்சு அடிபடுகிறது.

இலங்கை வந்து அரசின் வேறு பதவிகள் எதனையும் அவர் ஏற்பாரா என்பது தெரியவில்லை.

அதேபோல சீனாவில் பணியாற்றும் தூதுவர் பாலித கோஹனவும் விரைவில் நாடு திரும்பலாமென தெரிகிறது.

# கிரிக்கெட் வீரர் தனுஷ்க கைது!

### பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டில் அவுஸ்திரேலிய பொலிஸார் அதிரடி நடவடிக்கை



**ஏ.அகீல் சிஹாப்**

இலங்கை கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான 31 வயதான தனுஷ்க குணதிலக்க பாலியல் குற்றச்சாட்டின் அடிப்படையில் நேற்று அதிகாலை அவுஸ்திரேலியாவின் சிட்னியில் வைத்து கைதுசெய்யப்பட்ட நிலையில், அவருக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுத்துள்ளது.

டேட்டிங் செயலி மூலம் தனுஷ்க குணதிலக்கவை சந்தித்த 29 வயது பெண், தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாக குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வாரத்தின் முற்பகுதியில் சிட்னியில் உள்ள வீடொன்றில் நடந்துள்ளதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவித்தன.

02 பக்கம்

## லிட்ரோ சிலிண்டரின் விலை அதிகரிப்பு



நாட்டில் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் எரிவாயு அடங்கிய சிலிண்டரின் விலை 80 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## பலாலி விமான நிலையத்தை இயக்க இந்தியா விரும்பவில்லை!

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



**யாழ். செய்தியாளர்**

பலாலியில் விமானத்தை இறக்க இந்தியா விரும்பவில்லையென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

02 பக்கம்

## மு.கா. உயர்பீடத்தில் கடும் வாக்குவாதம்

### மன்னிப்புக் கேட்ட எம்.பிக்களை மீண்டும் கட்சிக்குள் சேர்க்க தீர்மானம்

**நமது விசேட செய்தியாளர்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடக் கூட்டம் நேற்றுக் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றபோது கடும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன.

கட்சியின் கொள்கைகள், தீர்மானங்களை மீறி செயற்பட்டவர்களை மீண்டும் சேர்க்கக் கூடாதென இங்கு....

02 பக்கம்



'கோப் - 27' மாநாட்டில் கலந்துகொள்வதற்காக எகிப்துக்குச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் என்டோனியோ குட்டெரஸை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

## ஜனாதிபதியின் பொறுப்பில் நான்கு அமைச்சுகள்

02 பக்கம்

## சர்வதேச போட்டித்தன்மைக்கு ஏற்ப உள்நாட்டு வர்த்தகம் மறுசீரமைப்பு

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

நேரடி வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்கும் பிராந்திய விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தில் அங்கத்துவம் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் ஏதுவாக சேவைத் துறையை படிப்படியாக தாராளமயமாக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

02 பக்கம்

## இந்திய மீனவர்களிடம் மனிதாபிமானம் காட்டுக!

### அந்நாட்டு படைத்தரப்பு இலங்கை படையினரிடம் வலியுறுத்து



**திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது**

இந்திய மீனவர்களிடம் இலங்கை கடற்படை உள்ளிட்ட அந்நாட்டு பாதுகாப்பு படைகள் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

பாதுகாப்பு தொடர்பில் இரு நாட்டு படைத்தரப்பு பிரதானிகள்...

02 பக்கம்

## ஐயாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் வடக்கில் கடலட்டைப் பண்ணைகள்

**யாழ். செய்தியாளர்**

வடக்கு மாகாணத்தில் சுமார் ஐயாயிரம் ஏக்கரில் கடலட்டைப் பண்ணைகளை விரிவுபடுத்த ஏற்கனவே திட்டங்கள் தீட்டப்பட்டுள்ள நிலையில், சுமார் ஆயிரத்து 150 ஏக்கர் நிலப்பரப்பில் கடலட்டைப் பண்ணைகள் செயற்படுத்தப்படுவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். வடமாகாணத்தில் 32 கடலட்டைப் பண்ணைகள் காணப்பட்ட நிலையில், தான் கடற்றொழில் அமைச்சராக பதவியேற்ற பின்னர் 600 கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 339க்கும் அதிகமாக கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

02 பக்கம்

## ஆதிவாசியொருவர் நாடாளுமன்றத்துக்கு

### வேடுவ தலைவர் கோரிக்கை



ஆதிவாசிகள் இனத்தைச் சேர்ந்த ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ள ஆதிவாசிகளின் தலைவர்...

02 பக்கம்

## ஜனாதிபதி எகிப்து பயணம்

எகிப்தின் ஷார்ம் எல் ஷேக் நகரில் நடைபெறும் காலநிலை மாற்றம் தொடர்பான 'கோப் - 27' மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை எகிப்து நோக்கிப் புறப்பட்டார்.

நவம்பர் 06ஆம் திகதிமுதல் 18ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இம்மாநாட்டில் இன்றும் நாளையும் ஜனாதிபதி விக்கிரமசிங்க பங்கேற்கும் அதேநேரம், இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள காலநிலை மாற்றம் தொடர்பிலும் உரையாற்றவுள்ளார். இதேவேளை அங்கு நடைபெறவுள்ள உலக உணவு பாதுகாப்புப் பேரவை மற்றும் உலக தலைவர்களின் பேரவையிலும் ஜனாதிபதி பங்குபற்றவுள்ளார்.

பாரிஸ் ஒப்பந்தம் மற்றும் சாசனத்தின் கீழ் இணங்கியுள்ளமைக்கு அமைய காலநிலை தொடர்பான உலகின் கூட்டு இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக கோப்-27இல் நாடுகள் ஒன்றிணைகின்றன.

02 பக்கம்

## எல்லை நிர்ணயம் சமூகத்துக்கு முரண்

### கூறுகிறது தேர்தல் ஆணைக்குழு

**நா. தினுஷா**

நாட்டில் இதற்கு முன்னர் இடம்பெற்ற ஒவ்வொரு எல்லை நிர்ணயமும் சமூகத்துக்கு முரண்பாடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, எல்லை நிர்ணயக் குழுவினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் அனைத்தும் அந்தந்தத் துறை சார்ந்தவர்களின்...

02 பக்கம்



## குழப்பம் விளைவிக்கும் குழுவோடு இணைந்து போராடத் தயாரில்லை

### சஜித்தை கடுமையாகச் சாடுகிறார் அநுர

**நா.தினுஷா**

குழப்பத்தை ஏற்படுத்தும் குழுவினரோடு இணைந்து ஆர்ப்பாட்டம் செய்ய தேசிய மக்கள் சக்தி தயாராக இல்லை. சஜித் தலைமையிலான அணி ஆர்ப்பாட்டத்தில் குழப்பத்தை உருவாக்கும் என்பது எங்களுக்கு முன்பே தெரியும். அதன் காரணமாகவே அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான....

02 பக்கம்

## குழப்பம் விளைவிக்கும்...

அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் அம்பலாந்தோட்டை தொகுதி கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் அடுத்துவொரு தேர்தல் இடம்பெறுமாக இருந்தால் அதன்போதே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தரம் என்னவென்பது தெரியும். அதன் பின்னர் அந்தக் கட்சியினால் ஆட்சி செய்ய முடியாத நிலை உருவாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறுமாக இருந்தால், தேர்தல் முடிவுகள் அறிவித்த கையோடு நாடாளுமன்றத்தை கலைக்க நேரிடும். காரணம் உள்ளூராட்சி மன்ற தேர்தலேயே அரசாங்கத்தின் தரம் தெரியவந்துவிடும். அதன் பின்னர் இயல்பாகவே இந்த அரசாங்கத்தால் தொடர்ந்து ஆட்சி செய்யமுடியும்.

இதனாலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலந்தாழ்த்த இந்த அரசாங்கம் சூழ்ச்சி செய்துவருகிறது. தேசிய மக்கள் சக்தியாகிய நாங்கள் மக்கள் வாக்கெடுப்பு உரிமையை பாதுகாப்பதற்காக, முழுமையாக தலையீட்டு போராட தயாராக இருக்கிறோம். அரசாங்கம் எண்ணும் நேரத்தில் அவர்களுக்கு ஏற்றவாறு தேர்தலை காலந்தாழ்த்த முடியாது. தேர்தலை காலந்தாழ்த்த இடமளிக்கவும் மாட்டோம்.

கொழும்பில் கடந்த இரண்டாம் திகதி முன்னெடுக்கப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தில் ஏன் கலந்துகொள்ளவில்லை என்று என்னிடம் வினவுகிறார்கள். சற்று ஆராய்ந்து பார்ப்போம் என்று நாங்கள் கூற, அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டால் சிறப்பாக இருக்குமல்லவா என்று வினவுகிறார்கள். சஜித் அணியுடன் எவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்வது என்று வினவ நேர்ந்தது.

ஆனால், நாங்கள் கொடுக்க வேண்டிய பதிலை இரண்டாம் திகதி அவர்களே கொடுத்து விட்டார்கள். அடித்துக்கொள்கிறார்கள், அங்கும் இங்கும் தாவுவதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

வேடிக்கையான அரசியல் மக்களுக்கு தேவை இல்லை என்பதை அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒழுக்கமுடைய, நோக்கம் கொண்ட, திட்டமிடப்பட்ட அரசியலையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதுவே மக்களுக்கும் அவசியமாக இருக்கிறது.

ஆந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள செல்ல ஒன்று சேர்ந்த அணியை பார்த்துவுடன் நிச்சயமாக அங்கு குழப்பம் ஏற்படும் என்று கருதினோம். எனவே, குழப்பகரமானவர்களின் நோக்கங்களுக்காக செயற்பட தேசிய மக்கள் சக்தி ஒருபோதும் தயாராக இல்லை.

அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் நாட்டில் இருக்கிறது என்பது உண்மை. அடக்குமுறைக்காக மாத்திரமல்ல, இலஞ்ச ஊழல், பொருளாதார சீர்கேடு என்று ஒவ்வொரு விடயத்துக்கும் மக்கள் போராடி வருகிறார்கள். அடக்குமுறைக்கு இவர்களுடன், பொருளாதார சிக்கலுக்கு இவர்களுடன் என்று தனித்தனி குழுக்களாக ஆர்ப்பாட்டம் செய்வது நியாயமற்றது.

அடக்குமுறைக்கு எதிராக ஜனநாயகத்துக்காகவும், பொருளாதார சீர்கேடுக்கு எதிராக பொருளாதார அபிவிருத்திக்காகவும், ஊழலுக்கு எதிராக ஊழலை முடிவுக்கு கொண்டுவருவதற்காகவும், தூய அரசியலை முன்னெடுப்பதற்காகவும் அனைவரும் ஓரணியில் சேர வேண்டும் என்ற விடயத்தில் தேசிய மக்கள் சக்தி உறுதியாக இருக்கிறது.

மக்களுக்காக ஆர்ப்பாட்டத்தில் வேறுபாடு இருக்க கூடாது. மக்களுக்கு இருக்கும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வை பெற்றுக்கொடுக்கும் ஒரு வேலைத்திட்டமாகவே தேசிய மக்கள் சக்தி கட்டியெழுப்பட்டுள்ளது என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

# உள்ளூராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்படும்

## அதற்காகவே புதிய குழுவென்கிறார் மஹிந்த தேசப்பிரிய

*நா. தினுஷா*

உள்ளூராட்சிமன்ற தேர்தலை உரிய நேரத்தில் உரிய முறையில் நடத்துவதற்கான முழு பொறுப்பும், தேர்தல் ஆணைக்குழுவுக்கே இருக்கிறது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காகவே புதிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. எனவே, தேசிய எல்லை நிர்ணயக் குழு தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு தடையாக இருக்காது என்று அந்தக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தலை காலந்தாழ்த்துவதற்கான சாத்தியம் தென்படவில்லை என்றும் ஒருவேளை இதுதொடர்பில் நாடாளுமன்றத்தில் யோசனைகள் முன்வைக்கப்பட்டால் காலந்தாழ்த்துவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொது நிர்வாகம், உள்ளநாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சராக செயற்பட்டுவரும் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் கடந்த முதலாம் திகதி தேசிய எல்லை நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. இம்மாதம் முதலாம் திகதி முதல் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் வகையில் இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஜயலத் ரவி திசாநாயக்க, டபிள்யூ.எம்.எம்.ஆர்.அதிகாரி, கே.தவலிங்கம், ஐ.ஏ.ஹமீட் ஆகியோர் உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவின் செயற்பாடுகள் குறித்து நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொறுப்பான அமைச்சருக்கு இருக்கும் அதிகாரங்களுக்கமைய, ஐவரடங்கிய எல்லை நிர்ணய குழுவொன்றை நியமிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த குழுவை நியமிக்கும்போது இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட குழுக்களை போன்று, அரசியலமைப்பினூடாக நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணய குழுவில் உறுப்பினர் ஒருவரை உள்ளடக்கிய வகையில் இந்த தேசிய குழுவை நியமிக்குமாறு நாங்கள் கோரியிருந்தோம்.

அதற்கமையவே, ஆணைக்குழுவின் உறுப்பினராக செயற்பட்டு வரும் ஜயலத் ரவி திசாநாயக்கவை குழுவில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எண்ணாயிரமாக இருக்கும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை நான்காயிரமாக குறைக்குமாறு ஜனாதிபதி கோரியிருந்தார். ஜனாதிபதியின் இந்த யோசனை தொடர்பில் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தது. கலந்துரையாடி அமைச்சரவையின் அனுமதியை பெற்றதன் பின்னர், இந்த குழுவை நியமிக்குமாறு உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொறுப்பான அமைச்சராக இருக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே, உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கையை நான்காயிரமாக குறைப்பதே எங்களின் பொறுப்பாக அமைந்துள்ளது.

குழுவொன்றை நியமிப்பதனூடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் காலந்தாழ்த்தப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஏதாவதொரு தேர்தலை காலந்தாழ்த்துவதாக இருந்தால், அது தொடர்பில் இருக்கும் சட்ட ஏற்பாடுகளிலுள்ள அதிகாரங்களுக்கமையவே காலந்தாழ்த்தப்படும்.

எனவே, தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதற்கான பொறுப்பு முழுமையாக தேர்தல் ஆணைக்குழுவுக்கே இருக்கிறது. தேர்தலுக்கு அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருப்பதால், அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சட்ட ஏற்பாடுகளுக்கமைய அவர்களால் செயற்பட முடியும். எங்களின் செயற்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

மேலும், தற்போதுள்ள சூழ்நிலையில் தேர்தல் காலந்தாழ்த்தப்படுவதற்கான வாய்ப்புகள் தென்படவில்லை.

நாடாளுமன்றத்தில் ஏதாவதொரு யோசனைகளை முன்வைத்து இதில் மாற்றத்தை கொண்டுவந்தால் மாத்திரமே தேர்தல் நடத்தும் காலத்தில் மாற்றம் ஏற்படும். எனவே, ஒருபோதும் தேர்தலை காலந்தாழ்த்துவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று நான் நம்புகிறேன் என்றார்.

## ஆதிவாசியொருவர்...

ஊரு வரிகே வன்னில எத்தோ, தேசியப்பட்டியலின் ஊடாக சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென கோரிக்கை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், தமது இனம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சோ, அமைச்சரோ இல்லையென சுட்டிக்காட்டினார்.

“நாம் எமது பிரச்சினைகள் குறித்து எத்தனை பிரேரணைகள் அனுப்பினாலும் அவை பற்றி நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு எவரும் கிடையாது. ஏனைய சமூகத்தினரின் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு ஏராளமானோர் இருக்கிறார்கள்” - இவ்வாறு ஆதிவாசிகளின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தேசிய வர்த்தகக் கலந்துரையாடல் குழுவின் பிரதிநிதிகளுக்குமிடையில் கடந்த 04 ஆம் திகதி பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திர வர்த்தகம், சர்வதேச வர்த்தகத்தின் எதிர்கால தோற்றம் மற்றும் அதற்கு ஏற்றால்போல கொள்கைகளை மாற்றியமைப்பது போன்ற விடயங்கள் தொடர்பில் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி நீண்ட நேரம் விளக்கமளித்தார்.

மேலும், விரிவடைந்து வரும் சர்வதேச வர்த்தகச் செயற்பாடுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் இதனால் ஏற்படக்கூடிய போட்டித்தன்மை காரணமாக உள்நாட்டு தொழில் துறைகளுக்கு ஆதரவு வழங்குவதற்கும் ஏதுவாக அரசாங்கம் வர்த்தக நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமென்றும் அவர் தெரிவித்தார்.

பிராந்திய மற்றும் உலக மட்டத்திலான விநியோகச் சங்கிலியை அணுகுதல், உலகப் பொருளாதாரத்துடன் மீள இணைதல் என்பன நாட்டின் பொருளாதாரத்தை மீளப் புதுப்பிப்பதற்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை மூலங்களாகும்.

இதற்கமைய அரசாங்கம் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற பிரதான ஏற்றுமதிச் சந்தையில் பிரவேசித்து வருகின்றபோதும் தனது ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கில் பாரிய மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களை இலக்கு வைத்து விரிவான சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்தும் முயற்சியிலும் களமிறங்கியுள்ளது.

இந்நோக்கத்திற்காக தேசிய வர்த்தக கலந்துரையாடல் குழுவை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. பாரியளவிலான நேரடி முதலீடுகள் மற்றும் சிறந்த ஏற்றுமதி நிலவுகின்ற நாடுகளான இந்தியா, சீனா, தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை புதுப்பிப்பதே இக்குழுவின் பிரதான இலக்காகும்.

இதன் மூலம் பொருளாதார நெருக்கடியால் உள்நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள கைத்தொழில் துறைகளுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் ஆரம்ப மூலப்பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் மூலதனங்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இக்கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வர்த்தக, வாணிபம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் , வெளிவிவகார அமைச்சு, சட்ட மா அதிபர் திணைக்களம், திறைசேரி ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## எல்லை நிர்ணயம்...

ஒத்துழைப்புடனேயே முன்னெடுக்கப்பட வேண்டுமென தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். மேலும், எதிர்காலத்தில் இன, மத அடிப்படையில் பதிவுசெய்யப்படும் கட்சிகளுக்கு அனுமதி வழங்காமலிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் இதற்கு முன்னர் இடம்பெற்ற ஒவ்வொரு எல்லை நிர்ணயமும் சமூகத்துக்கு முரண்பாடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆய்வுகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

கட்சியொன்றை பதிவுசெய்யயும்போது இன, மத அடிப்படையில் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் இருக்குமாக இருந்தால், அவ்வாறான கட்சிகளை இனிமேல் பதிவு செய்யாமலிருப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இன, மத அடிப்படையில் இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ள கட்சிகள் தொடர்பிலும், எதிர்காலத்தில் ஒவ்வொன்றாக விசாரணைக்கு உட்படுத்தி சாதகமான தீர்மானங்களை எடுக்க தேர்தலை ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

தேசிய எல்லை நிர்ணயக் குழுவை நியமிக்கும்போது, சகல எல்லை நிர்ணயங்களையும் அந்தந்தத் துறையினரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளுமாறு நாங்கள் கோரியுள்ளோம். எங்களின் கோரிக்கை நாடாளுமன்ற தெரிவுக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## கிரிக்கெட்...

அனுமதியின்றி தன்னுடன் உடலுறவு கொண்டதாக குறித்த பெண்ணினால் நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையிலேயே ஆஸி. நேரப்படி நேற்று முன்தினம் இரவு இலங்கை அணி தங்கியிருந்த ஹோட்டலில் வைத்து தனுஷ்க குணதிலக்க கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட தனுஷ்க குணதிலக்க, சிட்னி பொலிஸாரினால் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், குற்றச்சாட்டுகளை ஆராய்ந்த நீதிபதி, தனுஷ்க குணதிலக்கவிற்கு பிணை வழங்க மறுப்பு தெரிவித்துள்ளார்.

டேட்டிங் செயலி மூலம் தொடர்ந்தும் இணைவழியில் இருவரும் பேசிக்கொண்டிருந்ததாகவும் தனது அனுமதியின்றி கடந்த நவம்பர் 02 ஆம் திகதி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானதாகவும் பாதிக்கப்பட்ட 29 வயதான பெண் தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்ந்த அவுஸ்திரேலிய பொலிஸாரின் ரோஸ் பே விசேட பொலிஸ் குழு, சிட்டி சசெக்ஸ் பகுதியில் இலங்கை வீரர்கள் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று அதிகாலை ஒரு மணிக்கு தனுஷ்கவை கைதுசெய்தது.

நியூ சவுத் வேல்ஸ் பாலியல் குற்ற விசாரணைப் பிரிவின் தலைமை அதிகாரி ஜெய்ன் டோஹெர்ட்டி இது குறித்துக் கூறுகையில், பாதிக்கப்பட்ட பெண் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இது துரதிர்ஷ்டமானது என்றார்.

இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடருக்காக அவுஸ்திரேலியாவுக்கு சென்றிருந்த தனுஷ்க குணதிலக்க கடந்த மூன்று வாரங்களுக்கு முன் உபாதைக்குள்ளான நிலையில், அணியில் இருந்து நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக அஷேன் பண்டார இணைத்துக்கொள்ளப்பட்டார்.

ஆனால், அணி நிர்வாகம் தனுஷ்க குணதிலக்கவை அவுஸ்திரேலியாவில் இருந்து நாட்டுக்கு திருப்பி அனுப்பாது அணியுடன் வைத்திருந்தது. இதேவேளை, 2017 ஆம் ஆண்டு இந்திய அணியுடன் இடம்பெற்ற தொடரின்போது இரவு விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு மறுநாள் பயிற்சிக்கு வருகை தராமை காரணமாக தனுஷ்க குணதிலக்கவுக்கு ஆறு ஒருநாள் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது.

அதேபோல், 2018 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க அணியுடன் இடம்பெற்ற டெஸ்ட் தொடரின்போது இலங்கை வீரர்கள் தங்கியிருந்த அறைக்கு வேறொரு நபரை வரவழைத்தமை தொடர்பில் தனுஷ்க மீது இலங்கை கிரிக்கெட் நிறுவனம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தது.

இங்கிலாந்து அணியுடன் கடந்த ஆண்டு ஜூன் மாதம் அந்நாட்டில் இடம்பெற்ற கிரிக்கெட் தொடரின்போது கொவிட் விதிமுறைகளை மீறி மேலும் இரு வீரர்களுடன் வெளியில் சுற்றித்திரிந்தமைக்கு தனுஷ்க குணதிலக்க உள்ளிட்டோருக்கு எதிராக கடும் விமர்சனங்கள் எழுந்தன. அந்த மூன்று வீரர்களுக்கும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாட ஒரு வருடம் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், தனுஷ்க மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நேற்று அறிவித்தது. இந்த விடயம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளை உன்னிப்பாக கண்காணிப்பதாகத் தெரிவித்துள்ள இலங்கை கிரிக்கெட் நிறுவனம், சர்வதேச கிரிக்கெட் பேரவையுடன் இணைந்து விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## பலாலி விமான...

பலாலி விமான நிலையம் திறக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்தும் அது இயங்குநிலையில் இல்லாதமை குறித்து ஊடகவியலாளர்களால் வினவப்பட்டபோதே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பலாலி விமான நிலையம் இயங்குவதற்கு தயாரான நிலையிலையே உள்ளது. ஆனாலும், அங்கு விமானங்கள் வரத் தயாராக இல்லாத நிலைமையே காணப்படுகிறது. இந்திய விமானங்கள் அங்கு தரையிறங்கத் தயாரில்லை. அதனாலயே விமான நிலையம் இயங்காத நிலையில் காணப்படுகிறது என்றார். பலாலி விமான நிலையத்தில் இருந்த தொழில்நுட்ப உபகரணங்கள் உள்ளிட்டவை தெற்கில் உள்ள விமான நிலையங்களுக்கு எடுத்து செல்லப்பட்டு உள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளதாக இதன்போது ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

அது முற்றிலும் தவறான தகவல். நான் பொய் சொல்ல வேண்டிய தேவையில்லை. பலாலி விமான நிலையத்தில் இருந்து எதுவும் எங்கும் கொண்டு செல்லப்படவில்லை.

இந்திய விமான நிறுவனங்கள் தமது விமானங்களை பலாலியில் தரை இறக்கத் தயார் எனில் ஓர் இரவில் பலாலி விமான நிலையத்தை இயங்க வைக்க என்னால் முடியும் என்றார்.

## இந்திய மீனவர்களிடம்...

கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய ஆலோசனைக் கூட்டத்தின்போதே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து ஆலோசனை கூட்டத்தில் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன.

இது குறித்து இந்திய மத்திய பாதுகாப்புத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையேயான 32ஆவது சர்வதேச கடல்சார் எல்லை தொடர்பான ஆலோசனை கூட்டம் கடந்த நான்காம் திகதி நடைபெற்றது. வங்காள விரிகுடாவில் இலங்கை கடற்படை கப்பலான சயூராவில் இந்தக் கூட்டம் நடந்தது.

இந்திய கடற்படையின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதி தலைமை அதிகாரி ரியர் அட்மிரல் வெங்கட்ராமன் மற்றும் இலங்கை கடற்படையின் வடபகுதி தலைமை அதிகாரி ரியர் அட்மிரல் தென்னக்கோன் ஆகியோர் இந்த ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்று கருத்து பகிர்ந்தனர்.

பாக்கு நீரிணைப் பகுதியில் இந்திய மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு பிரச்சினைகள் பற்றி இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இந்திய மீனவர்களிடம் இலங்கை கடற்படை உள்ளிட்ட அந்நாட்டு பாதுகாப்பு படைகள் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்று இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இரு தரப்பினரும் உடனடியாக செயல்படக்கூடிய பிரச்சினைகளில் பரஸ்பரம் தகவல்களை பரிமாறிக்கொள்வது பற்றியும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இரு நாடுகளின் உறவிலுமுள்ள பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான களமாக இந்த கூட்டம் அமைந்திருந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியின் பொறுப்பில்...

*(நா. தினுஷா)*

முக்கியமான நான்கு அமைச்சுகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம்.எஸ்.பீ.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த நான்காம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானிக்கமைய, அரசியலமைப்பின் 44 (03)ஆவது உறுப்புரையின் கீழ் பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் கலந்தாலோசித்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு, மகளிர், சிறுவர் விவகார மற்றும் வலுவூட்டல் அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு என்பன ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

## ஐயாயிரம் ஏக்கர்..

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் அலுவலத்தில் நேற்று முன்தினம் (05) மாலை ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

கடற்றொழிலாளர்கள் தமது தொழில் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் கடல் வளங்கள் அழிக்கப்படுவதுடன், கடற்றொழிலாளர்களின் உபகரணங்கள், படகுகள் என்பன சேதமாக்கப்படுவதனாலும் அவர்கள் வாழ்வாதாரம் அழிந்து வருகின்றது.

இந்த நிலையில், நாங்கள் பழையவை கழிதல் எனும் அடிப்படையில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்தி வாழ்வாதாரங்களை பெருக்குவதற்கு வழி ஏற்படுத்த வேண்டும்.

அதனை அடிப்படையாக கொண்டே கடலட்டை வளர்ப்பு , பாசி வளர்ப்பு , மீன் வளர்ப்பு , இறால் வளர்ப்பு என்பவற்றை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

**வடக்கில் 5000 ஏக்கரில் கடல் அட்டை பண்ணை**

கடலட்டை பண்ணைகள் தொடர்பில் சிலர் அறிந்து பேசுகிறார்களோ அல்லது அறிந்தும் அறியாதவர்கள் போல் பேசுகிறார்களோ என எனக்குத் தெரியாது.

வடக்கு மாகாணத்தில் சுமார் 5000 ஏக்கரில் கடல் அட்டை பண்ணைகளை விரிவுபடுத்த ஏற்கனவே திட்டங்கள் தீட்டப்பப்பட்டுள்ள நிலையில், சுமார் 1150 ஏக்கரில் கடலட்டைப் பண்ணைகள் செயல்படுத்தப்படுகிறன.

நான் அமைச்சராக வர முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் 18 பண்ணைகளும் யாழ். மாவட்டத்தில் 11 பண்ணைகளும் மன்னார் மாவட்டத்தில் 3 பண்ணைகளுமாக 32 பண்ணைகள் காணப்பட்டன.

நான் அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் 277 பண்ணைகள் அமைக்கப்பட்டதுடன், மேலும் 163 பண்ணைகள் அமைக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 245 பண்ணைகள் அமைக்கப்பட்டதுடன், மேலும் 176 பண்ணைகள் அமைக்கப்படவுள்ளதோடு மன்னார் மாவட்டத்தில் 78 பண்ணைகள் அமைக்கப்பட்டதுடன், இன்னும் பண்ணைகள் அமைக்கப்படவுள்ளன.

**ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டே அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

நாரா நிறுவனம் மற்றும் கடற்றொழில் திணைக்களம் போன்றவற்றினால் ஆய்வு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட பகுதிகளிலேயே கடலட்டை பண்ணைகள் அமைக்கப்படுகின்றன.

எனினும், தன்னிச்சையாக யாராவது அனுமதிகள் இன்றி கடலட்டை பண்ணைகளை அமைப்பார்களாயின் அவை அகற்றப்படும்.

தற்போது உருவாக்கப்பட்டுள்ள பண்ணைகளில் 95 வீதமானவை அந்தந்தப் பிரதேசத்தினை சேர்ந்த கடற்றொழிலாளர்களினாலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக மக்களை உசுப்பேற்றி அரசியல் செய்யும் அரசியல்வாதி நான் அல்ல. அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நூல் வெளியீடு ஒன்றின்போது கூட கடலட்டை பண்ணைகளால் சூழலுக்கு ஆபத்து என கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதில் சூழலியலாளர் என ஒருவர் சூழலுக்கு ஆபத்தானது கடலட்டைப் பண்ணை எனக் கூறி இருந்தார். அவர் வடமாகாண சபையின் அமைச்சராக இருந்தபோது ஊழல் குற்றச்சாட்டுக்களில் சிக்கியவர். அவருக்கு சூழல் பாதுகாப்பு தொடர்பில் கதைக்க தகுதியில்லை.

அதேபோன்று கடலட்டை பண்ணைகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதில் பலர் கடலட்டை பண்ணைகள் அமைக்க எம்மிடம் அனுமதி கோரி, அவர்களுக்கு அனுமதிகள் வழங்கப்படாத நிலையில் அவர்கள் எதிர்க்கின்றார்கள்.

மக்களின் எதிர்காலத்துக்கு எது சரியோ அதை முன்பே திட்டமிட்டு பலவற்றை நிறைவேற்றியுள்ளதோடு இன்னும் நிறைவேற்றுவேன்.

என்னை பொறுத்தவரையில் இந்தியாவா, சீனாவா என்ற வினா எழுப்பப்படுமானால் இந்தியாவே எனக் கூறிக் கொள்வதோடு கடல் சார்ந்து மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்கள் விரைவாகவும் வினைத்திறனாகவும் செயல்படுத்தப்படும்.

அத்துடன் எமது மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் பட்சத்திலேயே அடுத்தகட்ட நகர்வுகள் மேற்கொள்ளப்படும்.

பூநகரி கிராஞ்சி பகுதி கடலட்டை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு பக்க சார்பாக செயற்படுகிறது.

கடலட்டை பண்ணைகளால் தாம் பாதிக்கப்படுகிறோம் என இருவர் கொடுத்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டவர், கடலட்டை பண்ணைகளால் தமது வாழ்வாதாரம் மேம்படும் என 187 பேர் கையொப்பம் வைத்து கொடுத்த பதில் முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை.

அதனால் மனித உரிமை ஆணைக்குழு பக்கசார்பாக அரசியல் நோக்கங்களுக்காக செயற்படுகின்றதா என்று எண்ணத் தோன்றுகின்றது.

அப்பகுதியில் பட்டிவலை மீன்பிடி முறைமை காணப்படுகின்றது. பட்டிவலை மீன்பிடியினால், மீன் வளங்கள் அழிவடைகின்றன. அதற்கும் அனுமதிகள் பெறப்பட வேண்டும். பல பட்டிவலைகள் அனுமதி பெறப்படாதவை.

அதனால், அனுமதி பெறப்படாத பட்டி வலைகள், கடலட்டை பண்ணைகளை அகற்றி, நற்றா நிறுவனம் ஊடாக மீண்டும் ஆய்வுகளை மேற்கொண்டு அளவுகளை வகுத்து அனைத்தையும் ஒரு ஒழுங்குக்குள் கொண்டு வரவுள்ளோம் என மேலும் தெரிவித்தார்.

## லிட்ரோ சிலிண்டரின்...

அந்த வகையில், 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை நான்காயிரத்து 360 ரூபாவாகும். அத்தோடு 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு ஆயிரத்து 750 ரூபாவுக்கும் 2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 815 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளன.

## ஜனாதிபதி...

கிளாஸ்கோவில் நடந்த கோப் - 26 மாநாட்டைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் அதன் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு, பாரிஸ் ஒப்பந்தத்தின்கீழ் தமக்குள்ள பொறுப்புகளை மேலும் வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்காக இம்முறை உலக நாடுகள் கோப்-27 இல் ஒன்றுகூடி தீர்மானம் எடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதியுடன் சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட், காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதியின் சர்வதேச விவகாரப் பணிப்பாளர் தினுக் கொலம்பகே மற்றும் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சென்ட்ரா பெரேரா ஆகியோரும் எகிப்து சென்றுள்ளனர்.

## முஸ்லிம் காங்கிரஸ்...

கடுமையாக வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனாலும், கடந்த காலங்களில் அவ்வாறு செயற்பட்டவர்களில் பைசல் காசிம், எம்.எஸ்.தௌபீக் ஆகிய எம்.பிக்கள் மன்னிப்புக் கடிதத்தை வழங்கியிருப்பதால் அவர்களை மீண்டும் கட்சியில் சேர்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் ஹரிஸ் எம்.பி. இன்னமும் மன்னிப்புக் கடிதத்தை வழங்காத காரணத்தினால் அவர் அதனை வழங்கும்வரை கட்சியில் மீண்டும் இணைப்பதில்லையென முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதற்கமைய பைசல் காசிம் கட்சியின் பொருளாளராகவும், தௌபீக் கட்சியின் தேசிய அமைப்பாளராகவும் கட்சியின் இன்றைய பேராளர் மாநாட்டில் நியமிக்கப்படலாமென தெரிகிறது. அதேசமயம் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ஹாபீஸ் நஸீர் எம்.பியின் பிரதித் தலைவர் பதவியில் அலிஸாஹிர் மௌலானாவும் மற்றுமொரு பிரதித் தலைவர் பதவிக்கு முன்னாள் எம்.பி. எம்.ஐ.மன்சூரும் நியமிக்கப்படவுள்ளனர். பிரதி அமைப்பாளர் பதவியில் மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை நியமிக்கப்படவுள்ளார்.

இதற்கிடையில் ஹரிஸ் எம்.பி. இன்றைய பேராளர் மாநாட்டுக்கு முன்னர் மன்னிப்புக் கடிதத்தை வழங்கினால் அவரை கட்சியில் மீண்டும் இணைக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேலும் தீர்மானித்துள்ளதாக அறியமுடிந்தது.

இதேவேளை, மு.கா. நிர்வாகக் குழுவில் தனது இளைஞர் விவகார இணைப்பாளர் பதவியிலிருந்து ஏ.எல்.தவம் தானாக முன்வந்து விலகிக்கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# கனகபுரம் மாவீரர் துயிலுமில்ல சிரமதானப் பணிகள் ஆரம்பம்



தமிழ்த் தேசிய மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு நேற்றைய தினம் (2022.11.06) காலை, கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கனகபுரம் மாவீரர் துயிலுமில்லப் பணிக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச்சிரமதானப் பணிகளில், அப்பணிக்குழுவின் செயலணி உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோரோடு, தமிழ்த் தேசியப் பயணத்தில் தன்முனைப்பாய் இணைந்து பயணிக்கும் இளைஞர்கள், பெண்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

# ஹலோவின் நிகழ்வில் உயிரிழந்த இளைஞரின் குடும்பத்திற்கு நட்டஈட்டை வழங்க நடவடிக்கை

## இலங்கைக்கான தென் கொரிய உயர்ஸ்தானிகர் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டு நேரடியாக ஆறுதல் தெரிவிப்பு





(இக்பால் அலி)

தென் கொரியாவில் இடம்பெற்ற ஹலோவின் நிகழ்வில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த உடத்தலவின்ன பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய முஹமட் ஜினத்தின் குடும்பத்தினரைச் சந்தித்த தென் கொரிய உயர்ஸ்தானிகர் சென்துஸ் வூன்ஜின் ஜெஒன்ங், உயிரிழந்த இளைஞரின் தந்தை, சகோதரர் மற்றும் மனைவியின் தந்தை ஆகியோரைச் சந்தித்து தனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டதுடன், உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நட்டஈட்டைப் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார்.

யட்டிநுவர பிரதேச சபை உறுப்பினர் வசீர் முக்தாருடன் இலங்கை தென் கொரிய உயர்ஸ்தானிகர் சென்துஸ் வூன்ஜின் ஜெஒன்ங் தம் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டபோது உயர்ஸ்தானிகர் இதனைத் தெரிவித்தார்.

உயிரிழந்த ஜினத்தின் குடும்பத்தின் ஈடேற்றத்திற்காகவும் அவரது பிரிவால் துயருற்றுள்ள உற்றார், உறவினர் அனைவருக்கும் தன்னுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

இவ்விளைஞரது ஜனாஸா நல்லடக்கம் 02-11-2022 வியாழக்கிழமை உடத்தலவின்ன ஜும்ஆப் பள்ளிவாசலில் ஜனாஸாத் தொழுகை நடத்தப்பட்டு உடத்தலவின்ன மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# எருக்கலம்பிட்டி கிராமத்தில் 75 வீடுகள் பயனாளிகளிடம் நேற்று கையளிப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் முதல் கட்டமாக அமைக்கப்பட்ட 75 வீடுகளை நேற்று ஞாயிற்றுக்கிழமை (6) காலை 10 மணியளவில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளிட்ட அதிதிகள் வைபவ ரீதியாக திறந்துவைத்து பயனாளிகளிடம் கையளித்துள்ளனர்.

யுத்தத்திற்கு பிற்பாடு மீளக் குடியேறியுள்ள மக்களுக்கு வீட்டுத் திட்டமானது பூரணத்துவம் அடையாத நிலையில், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் கோரிக்கைக்கமைய குவைத்தின் ஸகாத் ஹவுஸின் ((Zakath House) ) நிதியுதவியுடன் ISRC நிறுவனத்தின் அனுசரணையில் எருக்கலம்பிட்டி ஸகாத் பவுண்டேசனின் (Zakath Foundation) பூரண ஒத்துழைப்புடன் மன்னார் மாவட்டத்தின் எருக்கலம்பிட்டி கிராமத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள 200 வீடுகளைக்கொண்ட வீட்டுத்திட்ட செயற்றிட்டத்திற்கமைய முதற்கட்டமாக கட்டி முடிக்கப்பட்டுள்ள 75 வீடுகளை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளிட்ட அதிதிகள் இணைந்து உத்தியோகபூர்வமாக பயனாளிகளுக்கு கையளித்தனர்.

தலா 13 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த வீடுகளைப் பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தலைவர் ஆர். சூரிய ஆராய்ச்சி, மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப், ISRC நிறுவனத்தின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான ஏ.மிஹ்லார், குவைத்தின் இலங்கைக்கான தூதுவரின் இணைப்பாளர், மன்னார் பிரதேச சபைத் தலைவர், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் என பலரும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கந்தப்பளை எஸ்கடேல் தோட்டத்தில் தொண்டமான் கலாசார மண்டபம் திறப்பு



(க.கிஷாந்தன்)

கலாசார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நுவரெலியா, கந்தப்பளை எஸ்கடேல் தோட்டத்திற்கான ஆறுமுகம் தொண்டமான் கலாசார மண்டபம் நேற்று (06) இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது.

நுவரெலியா பிரதேச சபையின் தலைவர் வேலு யோகராஜின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நிதிச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தவிசாளர் பி.ராஜதுரை மற்றும் நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் என கட்சி முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜீவன் தொண்டமான் கருத்து தெரிவிக்கையில்,

2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர் அதன் உள்ளடக்கங்கள் தொடர்பில் ஆராயப்படும். மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதெனில் அதற்கு ஆதரவாக வாக்களிப்போம்.

"2023ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி முன்வைக்கப்படவுள்ளது. அதை யார் முன்வைக்கின்றார் என்பது முக்கியமல்ல. அதில் உள்ள விடயங்கள்தான் பிரதானம். அந்தவகையில் வரவு-செலவுத் திட்ட உள்ளடக்கங்கள் தொடர்பில் முதலில் ஆராயப்படும். அதில் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயம் இருந்தால் நிச்சயம் ஆதரிப்போம். ஏனைய கட்சிகளும் ஆதரிக்க வேண்டுமென கோரிக்கை விடுப்போம்.

அதேவேளை, பதுளையில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த தோட்டத் தொழிலாளியின் குடும்பத்துக்கு இழப்பீடாக 40 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொடுத்தோம்.

அதேபோல் டயகம கிழக்கு பிரிவிலும் மின்சாரம் தாக்கி தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார். எனினும், அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது எனக்கூறி மறைப்பதற்கு தோட்ட நிர்வாகம் முயற்சித்தது. அதற்கு நாம் இடமளிக்கவில்லை.

தொழிலாளர்கள் மத்தியில் ஒற்றுமை இல்லாததால்தான் தோட்ட நிர்வாகத்துக்கு துணிவு பிறக்கின்றது. பதுளை விவகாரத்தில் நாம் போராடும்போது, சில தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றனர். காட்டிக்கொடுப்பு இடம்பெற்றது. அவங்க குடும்பத்துக்குதானே நடந்தது, நமக்கு ஏன் என இருந்துவிடக்கூடாது. நாளை அந்தச் சம்பவம் நமது குடும்பத்துக்கும் நடக்கும். எனவே, தொழிலாளர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்''' - என்றார்.

# கவிஞர் நஜ்முல் ஹுசைன் தலைமையில் கட்டாரில் நடைபெற்ற கவியரங்கு





(நூருல் ஹுதா உமர்)

CWF கட்டார் அனுசரணையில் ஸ்கை தமிழ் வலையமைப்பு மற்றும் கட்டார் முத்தமிழ் மன்றம் ஆகியன கூட்டாக இணைந்து ஏற்பாடு செய்த கட்டார் மண்ணில் கவியரங்கு நிகழ்வு மதீனா கலீஃபா தெற்கு CWF அலுவலகத்தில் இலங்கை கவிஞர் கவிமணி என். நஜ்முல் ஹுசைன் தலைமையில் நடைபெற்றது.

"வண்ணத் தமிழெடுப்போம், வானமெங்கும் சிறகடிப்போம்" எனும் தலைப்பில் இடம்பெற்ற கவியரங்கில் கவிஞர்கள் மெய்யன் நடராஜ் - (இலங்கை), எஸ். சிவசங்கர் - (திருநெல்வேலி, இந்தியா), முகமது சிக்கந்தர் (புதுவை சிக்கந்தர்) - (புதுக்கோட்டை, இந்தியா), எம்.வை.எம்.ஷரீப் - (பலகத்துறை, இலங்கை), முஹம்மத் சமீன் - (ஹெம்மாதகம, இலங்கை), பாலமுனை றிஸ்வான் - (பாலமுனை, இலங்கை), நிஹாசா நிசார்- (கஹட்டோவிட்ட, இலங்கை), ஜோன்ஸ் ரமனாஜ் - (திருச்சி, இந்தியா), துந்துவ ஹஸீனா முன்ஸிர் - (இலங்கை) ஆகியோர் கவிதை பாடினர்.

இந்த நிகழ்வுக்கு சிறப்பு அதிதியாக கட்டாருக்கான இலங்கை தூதரக சிரேஷ்ட அதிகாரி அஷ்ஷேக். ரஷீத் எம்.பியாஸ் (நளீமி) , கௌரவ அதிதிகளாக கட்டார் இஸ்லாமிய வங்கி முகாமையாளர் முஹம்மத் சிராஜ் ஏ. முத்தலீப், CWF தலைவர் முஹம்மத் அக்ரம், கட்டார் முத்தமிழ் மன்ற நிர்வாகக் குழு உறுப்பினர் குரு ஸ்ரீ, கட்டார் தமிழ் சொல்வேந்தர்கள் மன்றத் தலைவி ஷோபா ராஜ், இலங்கை அரசாங்கத் தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரி, சிரேஷ்ட எழுத்தாளர் கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், அனைத்து சம்மேளன கட்டார் தலைவர் அமீர்தீன் மௌலானா, இலங்கையின் பிரபல நாவலாசிரியை ஜரீனா முஸ்தபா ஆகியோரும், விசேட அதிதிகளாக ஸ்கை தமிழ் வலையமைப்பின் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித், ஸ்கை தமிழ் வலையமைப்பின் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி, வலியுல்லாஹ் செயலாளர் ஒருங்கிணைந்த தமிழர் பேரவை, புத்தளம் சங்க கட்டார் தலைவர் சாஜித் ஜிப்ரி, கட்டார் வாழ் இலங்கை மகளிர் அமைப்பின் உதவிப் பொதுச் செயலாளர், மோகன பிரியா பிரசாத், கட்டார் முத்தமிழ் மன்ற விஜய் ஆனந்த், கட்டார் தமிழ் சொல்வேந்தர்கள் மன்றம் நிர்வாகக் குழு உறுப்பினர் ஹாழிர் மற்றும் அதன் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



# ஆடை பாரம்பரியம் பற்றிய கல்வி அமைச்சரின் கருத்தை சர்வதேச இந்துமத பீடம் வரவேற்பு

ஆசிரியர்களுக்கான பாரம்பரிய ஆடை களில் கடைசி வரையும் மாற்றங்களை கொண்டுவரப் போவதில்லை என்று கல்வியமைச்சர் கூறியிருப்பது இந்து மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது.

இவ்வாறு சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

அண்மைக்காலமாக அரசாங்க அலுவலக அதிகாரிகள் அணியும் ஆடைகள்போல் அவர்கள் விரும்பியவாறு அணியும்வண்ணம் இருப்பதுபோன்று பாரம்பரியமாக தங்களது உடைகளுடன் ஆசிரியர்கள் தமது பணிக்கு தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர்களுக்கும் அவர்கள் விரும்பியவண்ணம் ஆடைகள் அணிய வேண்டும் என்ற கருத்தினை ஆசிரியர் சங்கம் முன்வைத்திருந்தது. நிச்சயமாக இது வரவேற்கத்தக்க விடயம் அல்ல. கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆசிரியர்களுக்கான இந்த பாரம்பரிய ஆடைகளில் கடைசி வரையும் நான் மாற்றங்களை கொண்டுவரப்போவதில்லை என்று அடித்துக் கூறியிருப்பது நிச்சயமாக இந்து மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது.

அதாவது, இந்த பாரம்பரிய உடையானது ஆசிரியர்களுக்கு ஒரு தனித்துவமான கௌரவத்தையும் அதேபோன்று மாணவர்களுக்கு ஒரு தலைமைத்துவ உணர்வையும் அது எடுத்துக்காட்டுகின்றது. அதேவேளை, ஒவ்வொரு மத ரீதியான பாடசாலைகள் உள்ளன. அவர்கள் தங்கள் தங்கள் மதங்களைச் சார்ந்த பாடசாலைகளில் அவர்களது மதம் சார்ந்த அறிவுறுத்தல்களுக்கு அமைய அத்தகைய ஆடைகளை அணிந்து செல்கின்றார்கள். எனவே, யாரும் விரும்பிய ஆடைகளை அணியலாம் என்றால் அது சிலவேளை இத்தகைய மத ரீதியாக இயங்கும் பாடசாலைகளுக்கு கூட ஒரு பாதிப்பை ஏற்படுத்தி இது ஓர் இன விரிசலை ஏற்படுத்தக்கூடியவாறு இருக்கும்.

எனவே, ஒரு கண்ணியமான பாரம்பரியமிக்க குறிப்பாக, மத விழுமியங்களைச் சார்ந்த இந்த ஆடைகளை அணிந்து ஆசிரியர்கள் பணியில் ஈடுபடுவதே சாலச் சிறந்தது அது தொடர வேண்டும்.

இவ்வாறு கல்விய அமைச்சரினால் தெரிவிக்கப்பட்ட ஆணித்தரமான கூற்றுக்கு இந்து மக்களும் பக்கபலமாக இருப்பார்கள் என சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா மேலும் தெரிவித்துள்ளார்.

# 23 வயது காதலியை கடத்த முயன்ற 63 வயது காதலன்

## முதல் மரியாதை பாணி காதல் முல்லைத்தீவில்

23 வயது பெண்ணும் 63 வயதான முதியவருக்கும் ஏற்பட்ட காதலால் பெரும் களேபரம் ஏற்பட்டுள்ளது. கடத்த முயன்றார் என குறிப்பிடப்பட்டு, தாக்கப்பட்ட ஒருவரும், தாக்கிய இருவரும் முல்லைத்தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியொன்றைச் சேர்ந்த 23 வயதான இளம் பெண்ணொருவருக்கு சில மாதங்களின் முன்னர் திருமணம் நடந்தது. எனினும், சிறிது காலத்தில் குடும்பத்திற்குள் தகராறு ஏற்பட்டது.

தனது 23 வயதான மனைவிக்கும், மனைவியின் நெருங்கிய உறவினரான 63 வயதான நபருக்குமிடையில் காதல் தொடர்பு இருப்பதாக கணவன், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். சுமார் ஒரு மாதத்தின் முன்பாக அவர் இவ்வாறு முறைப்பாடு செய்திருந்தார்.

கனடாவில் வசித்த அந்த முதியவர் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவின் பிறிதொரு பகுதியில் வசிப்பவர். கனடாவில் நீண்டகாலம் வசித்தவர், தற்போது முல்லைத்தீவில் வசிக்கிறார்.பொலிஸார் அந்த இளம்பெண்ணை அழைத்து விசாரித்தபோது, 63 வயதான காதலனுடனேயே வாழப்போவதாக தெரிவித்தார்.

எனினும், பொலிஸார் அந்தப் பெண்ணுக்கு அறிவுரை கூறினர். அத்துடன், பெற்றோர் அந்தப் பெண்ணை அழைத்துச் சென்றனர்.

கடந்த ஒரு மாதமாக வெளித்தொடர்புகள் இல்லாமல் அந்தப் பெண், வீட்டில் தங்கவைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு அந்தப் பெண்ணை கடத்திச் செல்ல வந்ததாக குறிப்பிட்டு, வாகனமொன்றை சேதமாக்கிய பெண்ணின் உறவினர்கள், வாகன சாரதியையும் நையப்புடைத்தனர். கனடா வாசியின் ஏற்பாட்டில் பிறிதொருவர் வாகனத்தில் வந்து அந்தப் பெண்ணை ஏற்றிச்செல்ல முற்பட்டதாக பெண்ணின் உறவினர்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வாடகைக்குப் பெறப்பட்ட வாகனமொன்றையே அந்த நபர் செலுத்தி வந்துள்ளார். தாக்குதலுக்குள்ளான வாகன சாரதியும், தாக்குதல் நடத்திய பெண்ணின் சகோதரர்கள் இருவரும் முல்லைத்தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, நவம்பர் 07ஆம் திகதி, திங்கட்கிழமை

# இரட்டைக் குடியுரிமையும் எம்.பிக்களின் நேர்மையும்

அரசியலமைப்புக்கான 21ஆவது திருத்தம் கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சபாநாயகரும் அதில் கைச்சாத்திட்டு நடைமுறைக்குக் கொண்டுவந்த பின்னர் இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட எவரும் நாடாளுமன்றத்துக்கு வரமுடியாது, எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட்டு மக்களால் தெரிவாகும் பதவிகளுக்கு வரமுடியாது என்றாகிவிட்டது. இரட்டைக் குடியுரிமையுடன் தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எவரும் வெளிப்படையாக ஒத்துக்கொண்டு பதவிவிலகுவதுதான் மக்கள் பிரதிநிதிகள் என்று கூறப்படுபவர்களுக்கு அழகு. ஆனால், இரு வாரங்கள் கடந்த நிலையிலும், எமது நாடாளுமன்ற உறுப்பினர்களில் எவரும் இதுவரையில் அவ்வாறு செய்யவில்லை.

பத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக்குடியுரிமையைக் கொண்டவர்களாக இருப்பதாகக் கூறப்படுகிறது. ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் சம்பிக ரணவக்க இதை வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். அவ்வாறு பத்து பேர் இருப்பார்களாக இருந்தால் அவர்கள் சட்டவிரோதமாகவே நாடாளுமன்றக் கதிரைகளில் அமர்ந்திருக்கிறார்கள். நாட்டின் அதியுயர் சட்டவாக்க சபைக்குள்ளேயே சட்டவிரோத பிரதிநிதிகள் என்றால் இலங்கை ஜனநாயகம் எந்தளவுக்கு கேலிக்கூத்தாக்கப்படுகிறது என்று பாருங்கள்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் சகலரும் 2020 ஓகஸ்ட் பொதுத்தேர்தலில் தெரிவானவர்கள். அப்போது இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதைத் தடுக்கும் ஏற்பாட்டைக் கொண்ட 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நடைமுறையில் இருந்தது. இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் என்று கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தபோது உண்மையை மறைத்திருக்கிறார்கள் என்பது வெளிப்படையானது. தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு மாத்திரமல்ல, தங்கள் கட்சிகளின் தலைவர்களுக்கும் அவர்கள் உண்மையை மறைத்திருக்கிறார்கள் அல்லது உண்மை தெரிந்திருந்தும் அவர்களை வேட்பாளர்களாக தலைவர்கள் நியமித்தார்கள் என்றுதான் கூறவேண்டும்.

இந்த விவகாரத்திலுள்ள பெரிய பிரச்சினை இரட்டைக் குடியுரிமையுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை அடையாளம் காண்பதில் நாடாளுமன்றம் உட்பட சம்பந்தப்பட்டிருக்கும் அரச நிறுவனங்கள் எதிர்நோக்கும் சிக்கலாகும்.

இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருக்கும் அல்லது நியமிக்கப்பட்டிருக்கும் சாத்தியம் குறித்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் ஊடகங்கள் கேள்வியெழுப்பியபோது அதைக் கண்டுபிடிப்பது நாடாளுமன்றத்துக்குரிய பொறுப்பு அல்ல, தேர்தல்கள் ஆணைக்குழுவே அதைச்செய்யவேண்டும் என்று பதிலளித்தார். ஆனால், ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யும்போது அவரின் குடியுரிமை குறித்து விசாரணைசெய்வது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பு அல்ல என்று அதன் தலைவரான நிமல் புஞ்சிஹேவா கூறுகிறார்.

போதுமான சான்றுகள் இருந்தால் எவரும் இந்த விவகாரத்தில் நீதிமன்றத்தை நாடமுடியும் என்பது அவரது நிலைப்பாடு. 2019 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு கோட்டாபய ராஜபக்ஷ தனது அமெரிக்க குடியுரிமையை கைவிடாமல் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தார் என்று முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டபோது முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவும் இதே நிலைப்பாட்டையே எடுத்தார் என்பது கவனிக்கத்தக்கது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தங்களது இரட்டைக்குடியுரிமையை இரகசியமாக வைத்திருக்கிறார்கள் என்பது தொடர்பில் எழுந்திருக்கும் சர்ச்சை தொடர்பில் ஆராய்ந்து குடிவரவு - குடியகல்வு திணைக்களம் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் இரட்டைக் குடியுரிமையுடன் 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் கூட உண்மையைக் கூறாமல் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று அடையாளம் காணப்படுபவர்கள் நிச்சயம் பதவிகளைத் துறக்கவேண்டும். அவ்வாறு அடையாளம் காணப்பட்ட பின்னரும் நீதிமன்றத்தில்தான் தங்களின் அந்தஸ்து தீர்மானிக்கப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துவார்களோ தெரியவில்லை.

இறுதியாக நடைபெற்ற பொதுத்தேர்தலில் தங்கள் இரட்டைக் குடியுரிமையை மறைத்து போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்கள் கடந்த இரு வருடங்களுக்கும் கூடுதலான காலமாக சபையில் அங்கம் வகிக்கித்து வருகிறார்கள். இவர்கள் அம்பலப்படுத்தப்பட்டு நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேறவேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில் இதுவரையில் அவர்கள் பெற்ற சம்பளங்கள், விசேட கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகளை அவர்களிடமிருந்து மீட்க முடியுமா என்பதும் தெரியவில்லை. இதை நாடாளுமன்றம்தான் தீர்மானிக்கவேண்டும்.

ஆனால், தாங்கள் தேர்தலில் போட்டியிட்டபோது 19ஆவது திருத்தம் நடைமுறையில் இருந்தபோதிலும், பிறகு 2020 ஒக்டோபரில் நிறைவேற்றப்பட்ட 20ஆவது திருத்தம் இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் நாடாளுமன்றம் வர அனுமதித்ததால் தாங்கள் சட்டவிரோதமாக அல்லது முறைகேடாக எதையும் செய்யவில்லை என்று சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாதாடவும் கூடும். ஆனால், நியமனப்பத்திரங்கள் தாக்கலின்போது இரட்டைக் குடியுரிமை என்ற உண்மையை மறைத்து சட்டவிரோதமாகவே நடந்துகொண்டார்கள் என்பதில் மறுபேச்சுக்கு இடமில்லை.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு இந்த விவகாரத்தில் ஒரு முக்கிய பொறுப்பு இருக்கிறது. ஆனால், அந்தப் பொறுப்பை நிறைவேற்றவேண்டிய தார்மீக கடமை தங்களுக்கு இருக்கிறது என்று அவர்களில் எவராவது இதுவரை உணர்ந்ததாகத் தெரியவில்லை. தங்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் எவராவது இரட்டைக் குடியுரிமையுடையவராக இருக்கிறார் என்பதை கண்டறிந்து அவர்களை பதவிவிலகுமாறு தலைவர்கள் கேட்கவேண்டும். அவர்கள் அவ்வாறு செய்வார்களா?

திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு இதுவரையில் எந்த நாடாளுமன்ற உறுப்பினரும் தானாக முன்வந்து தனக்கு இரட்டைக் குடியுரிமை இருக்கிறது என்று மனச்சாட்சிப்படி பிரகடனம் செய்து பதவி துறக்க முன்வரவில்லை. முடிந்தால் கண்டுபிடியுங்கள் என்ற தோரணையில் அவர்கள் இருக்கிறார்கள். உண்மை கண்டறியப்பட்டு பதவி விலக வேண்டிவரும்போது தங்களுக்கு ஏற்படக்கூடிய அவமானத்தைக்கூட அவர்கள் பொருட்படுத்தவில்லை போலும். எமது அரசியல்வாதிகளின் நேர்மையினதும் கண்ணியத்தினதும் இலட்சணம் இது!

# பாகிஸ்தானில் அரசியல் வன்முறையின் செல்வாக்கு

• சத்யா

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பாகிஸ்தானை உலகில் மிகவும் ஆபத்தான தேசங்களில் ஒன்று என்று கடந்த மாதம் வர்ணித்தார். இதற்காக இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்க தூதுவரை வெளியுறவு அமைச்சுக்கு அழைத்து பாகிஸ்தான் அரசாங்கம் கடுமையான கண்டனத்தை தெரிவித்தது.

பாகிஸ்தானை அவ்வாறு வர்ணித்தபோது ஜனாதிபதி பைடன் தனது நாட்டைப்பற்றி என்ன நினைத்தார் என்று தெரியவில்லை. கடந்த ஜூன் மாதம் டெக்சாஸ் மாநிலத்தில் ஆரம்ப பாடசாலையொன்றில் இரு ஆசிரியைகளையும் 19 மாணவர்களையும் 18 வயதான இளைஞன் ஒருவன் சுட்டுக்கொலை செய்த சம்பவத்தையடுத்து பைடன் "உலகின் வேறு எந்த பகுதியிலும் இவ்வாறு கொடூரமான துப்பாக்கிப் பிரயோகங்கள் நடப்பது அரிது" என்று கூறியது நன்றாக நினைவிருக்கிறது.

2009 - 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் உலகளாவிய மட்டத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய பாடசாலை துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் குறித்து ஆய்வுசெய்த சி.என்.என். நிறுவனம், ஜி 7 அமைப்பில் உள்ள ஏனைய 6 நாடுகளில் இடம்பெற்ற பாடசாலை துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களை கூட்டிப் பார்க்கும்போது அமெரிக்காவின் சம்பவங்கள் 57 மடங்கு அதிகமானது என்று கண்டறிந்தது.



இவ்வருடம் மாத்திரம் சுமார் 30 பாடசாலை துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெற்றிருக்கின்றன. பாடசாலைகளில் மாத்திரம் தான் துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெறுகின்றன என்று இல்லை. உணவுவிடுதிகள், மதுபானசாலைகள், கடைத்தொகுதிகள், சூதாட்ட நிலையங்கள் மற்றும் பொது இடங்களிலும் அடிக்கடி துப்பாக்கி மனிதர்களின் வெறியாட்டம் அடிக்கடி இடம்பெறுகிறது.

இவ்வருடம் மாத்திரம் 215 துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றதாக கூறப்படுகிறது. ஆனால், அவற்றை கட்டுப்படுத்த அமெரிக்க நிர்வாகத்தினால் உருப்படியாக எதையும் செய்யமுடியாத அளவுக்கு துப்பாக்கி பயன்பாடு மீது கடுமையான கட்டுப்பாடுகளை கொண்டுவர முடியாத அளவுக்கு அமெரிக்கர்கள் மத்தியில் துப்பாக்கி மீதான மருட்சி இருக்கிறது. அமெரிக்காவின் இந்த பிரச்சினை புறம்பாக ஆராயவேண்டியது. இவ்வாறாக துப்பாக்கி மனிதர்களின் வெறியாட்டம் இடம்பெறுகின்ற உலகின் ஒரே வல்லரசின் ஜனாதிபதி பாகிஸ்தானைப் பார்த்து மிகவும் ஆபத்தான தேசங்களில் ஒன்று என்று கூறியதில் உள்ள முரண்நகையை சுட்டிக்காட்டவே இதை கூறவேண்டியேற்பட்டது.

அணு ஆயுதங்களை வைத்திருக்கின்ற பாகிஸ்தானில் அரசியல் உறுதிப்பாடும் இல்லாமல் இருப்பதால்தான் பைடன் நீண்டகாலமாக வொஷிங்டனின் நெருங்கிய நட்பு நாடாக இருந்துவந்த தெற்காசிய நாட்டை அவ்வாறு வர்ணித்தார் என்று சில அவதானிகள் வியாக்கியானம் செய்கிறார்கள். பாகிஸ்தானில் அரசியல்வாதிகளுக்கு இருக்கின்ற அச்சுறுத்தல்கள் பற்றி பைடன் மனதில் கொண்டிருந்தாரோ தெரியவில்லை.

கடந்தவாரம் (நவ.3) பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியில் ஆர்ப்பாட்ட வாகனப்பேரணியொன்றுக்கு தலைமைதாங்கி இஸ்லாமாபாத் நோக்கி வந்துகொண்டிருந்த முன்னாள் பிரதமர் இம்ரான் கான் துப்பாக்கித் தாக்குதலில் காயமடைந்தார். அப்பட்டமான கொலை முயற்சி என்று அவரின் உதவியாளர்கள் குற்றஞ்சாட்டிய அந்த சம்பவத்தில் 70 வயதான கானுக்கு பெரிய காயங்கள் ஏற்படவில்லை. லாகூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் உடனடியாகவே நாட்டு மக்களுக்கும் உரையாற்றினார். எவ்வாறெனினும், பேரணி மீதான துப்பாக்கிப் பிரயோக சம்பவம் பாகிஸ்தானின் அரசியல் எவ்வாறு வன்முறையில் இருந்து பிரிக்கமுடியாததாக இருக்கிறது என்பதற்கு பிந்திய உதாரணமாகும்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்த இளைஞன் கைதுசெய்யப்பட்ட பிறகு விசாரணையாளர்களுக்கு அளித்த வாக்குமூலத்தில் இம்ரான் கான் நாட்டு மக்களை தவறாக வழிநடத்துவதால்தான் அவரை சுட்டதாக கூறியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

"ஒவ்வொரு நாளும் காலையில் பாகிஸ்தான் பத்திரிகைகளை எடுத்துப்பார்த்தால், வழமையான குற்றச்செயல்களுக்கு மேலதிகமாக அரசியல் மற்றும் மத நோக்கங்களுக்காக பலர் கொலைசெய்யப்படுவது தொடர்பான செய்திகளை பரவலாக காணமுடியும். நிதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் பழங்குடியினர் மத்தியிலான முரண்பாடுகள் போன்ற காரணங்களுக்காகவும் பலர் கொலலப்படுகிறார்கள். இந்தப் போக்கு சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருந்து உயர்மட்டம் விரை காணப்படுகிறது" என்று முன்னர் இஸ்லாமாபாத்தில் பி.பி.சி.யின் செய்தியாளராகப் பணியாற்றியவரும் பாகிஸ்தான் விவகாரங்களில் நிபுணத்துவம் கொண்டவருமான ஓவன் பென்னட், 'ஜோன்ஸ் த கார்டியனுக்கு' கூறினார்.

உப கண்டம் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்டபோது ஏற்பட்ட பிரிவினையில் பாகிஸ்தான் தனிநாடாக வந்ததில் இருந்து அரசியல் வன்முறைப் பிரச்சினை தொடர்கிறது.

பாகிஸ்தான் உருவாக்கப்பட்டு நான்கு வருடங்களில் அதன் முதலாவது பிரதமர் லியாகத் அலி கான் வடபகுதி நகரான ராவல்பிண்டியில் பொதுக்கூட்டம் ஒன்றில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இந்தியாவுடனான 1971ஆம் ஆண்டுப் போரில் பாகிஸ்தான் தோற்கடிக்கப்பட்டு பங்களாதேஷ் தனிநாடாக உருவான பின்னர் சுல்பிகார் அலி பூட்டோ பாகிஸ்தானின் அதிகாரத்தைப் பொறுப்பேற்றார். இடதுசாரிப்போக்குடைய பூட்டோவை இராணுவச் சதிப்புரட்சியில் கவிழ்த்த ஜெனரல் சியா உல் ஹக் இரு வருடங்கள் கழித்து 1978இல் அவரை தூக்கிலிட்டார்.

சியாவின் எதேச்சாதிகார இஸ்லாமிய ஆட்சி அயல்நாடான ஆப்கானிஸ்தானில் மூண்ட போரினால் வலுப்பெற்றது. சோவியத் படைகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடிய ஆப்கான் இஸ்லாமியப் போராளிகளுக்கு அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் சியா ஆட்சியில் இருந்த பாகிஸ்தான் ஊடாகவே பெருமளவு ஆயுதங்களை வழங்கின. அந்தக் காலகட்டத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிராந்தியங்களில் நவீனரக ஆயுதங்கள் சர்வசாதாரணமாக புழக்கத்தில் இருந்தன. போதைப்பொருள் வியாபாரிகள் கூட தங்களது வீட்டின் கூரை மீது விமான எதிர்ப்பு துப்பாக்கிகளை பொருத்தி வைத்திருந்ததாக அந்த காலப்பகுதியில் செய்திகள் வெளியாகின.

ஜனாதிபதி சியா 1988இல் விமான விபத்து ஒன்றில் கொல்லப்பட்டார். அது அவரின் அரசியல் எதிரிகளின் சதிவேலை என்று நம்பப்பட்டது.

வேறு வகையான வன்முறைகளும் பாகிஸ்தான் அரசியலில் செல்வாக்குச் செலுத்தின. உள்ளூர் அதிகாரத் தரகர்கள் பலவந்தம், அச்சுறுத்தல் மூலமே தங்களது காரியங்களைச் சாதித்துக் கொண்டார்கள் பல தசாப்தங்களாகப் பிரிவினைவாதிகள் சுயாட்சிக்கு அங்கீகாரத்தைப் பெறுவதற்காகவும் மத்திய அரசாங்கத்திடமிருந்து வளங்களைப் பெறுவதற்காகவும் அமைதிவழியில் மாத்திரமன்றி ஆயுதங்களை பயன்படுத்தியும் போராட்டங்களை முன்னெடுத்தார்கள். காணி உரிமையாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான தகராறுகள் ஆயுதமுனையிலேயே பெரும்பாலும் தீர்க்கப்பட்டன. காணி உரிமையாளர்களே அதில் வெற்றிபெற்றனர்.

1980களிலும் 1990களிலும் மத, குல குழுக்களுக்கு இடையிலான பதற்றநிலை தீவிரமடைந்து படுமோசமான வன்முறைகள் மூண்டன. கராச்சி அல்லது பெஷாவர் போன்ற நகரங்களில் செயற்பட்ட பல உள்ளூர் அரசியல்வாதிகள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். அரச வன்முறைகளும் அதிகரித்துக் காணப்பட்டன. தேசவிரோத சக்திகளிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றுவது என்ற பெயரில் பாதுகாப்புப் படைகள் துப்பாக்கிகளை குடிமக்களுக்கு எதிராக திருப்பின. பாதுகாப்பு சேவைகள் அவற்றின் சொந்த நிகழ்ச்சித் திட்டங்களை உள்நாட்டில் வெளிநாடுகளிலும் நிறைவேற்றிக்கொள்ள கிரமமான படைகளுக்கு அப்பால் திரட்டல் படைகளையும் பயன்படுத்தின.

ஆப்கானிஸ்தானில் இருந்து திட்டம் தீட்டி அல் - கொய்தா இயக்கம் அமெரிக்காவில் மேற்கொண்ட 9/11 தாக்குதலுக்கு பிறகு பாகிஸ்தானில் வளர்ச்சியடைந்த இஸ்லாமிய தீவிரவாத குழுக்களுக்கு எதிராக பாதுகாப்புப் படைகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக பெருமளவு மோதல்களும் குண்டுவெடிப்புகளும் கொலைகளும் இடம்பெற்றன. இவற்றினால் பெரும்பாலும் பொதுமக்களே பாதிக்கப்பட்டனர். இத்தகைய வன்முறைச் சம்பவம் ஒன்றிலேயே பூட்டோவின் மகள் பெனாசிர் பூட்டோ கொல்லப்பட்டார்.

இரு தடவைகள் பிரதமராக இருந்த பெனாசிர் உலகில் மிகவும் பிரபல்யமான அரசியல்வாதிகளில் ஒருவராக விளங்கினார். 2007 பொதுத்தேர்தலில் பிரசாரத்தின்போது கராச்சியில் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பொன்றில் இருந்து உயிர்தப்பிய பெனாசிர் ராவல்பிண்டியில் நடைபெற்ற பேரணியொன்றில் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது கொலை உலகம் பூராவும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவருக்குப் போதுமான பாதுகாப்பை வழங்கத் தவறியதற்காக பாகிஸ்தான் அரசாங்கம் உலக நாடுகளின் கடும் கண்டனத்துக்குள்ளானது. பெனாசிரைக் கொலை செய்தவர்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.


அந்த கொலை இடம்பெற்ற வேளை ஜெனரல் பெரவெஸ் முஷாரப் ஆட்சியில் இருந்தார். அவரையும் கொலை செய்வதற்கு அடிக்கடி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவரின் கார் சென்றுகொண்டிருந்த பாலத்தின் கீழ் ஒரு தடவை பாரிய குண்டு வெடிக்கவைக்கப்பட்டது. ஆனால், அவர் உயிர்தப்பினார். எனினும், 2008 பதவியில் இருந்து இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டார். பாகிஸ்தானில் வன்முறைகள் தொடரவே செய்கின்றன. அண்மைக்காலமாக மதக்குழுக்களுக்கிடையிலான முரண்நிலை பல பள்ளிவாசல்களில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களுக்கு வழிவகுத்தன.

பாரதூரமான வன்முறைகளிலும் கொலைகளிலும் ஈடுபடுபவர்கள் தண்டனையில் இருந்து தப்பி சுதந்திரமாக நடமாடக்கூடியதாக இருக்கின்ற நிலைமை அரசியல் வன்முறைகள் கட்டுக்கடங்காமல் இருப்பதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும். போதுமான அரசியல் ஆதரவு இருந்தால் தாங்கள் சிறைக்குப் போகவேண்டியதில்லை என்று கொலையாளிகளுக்கு தெரியும் என்று அவதானிகள் கூறுகிறார்கள். இந்த தண்டனையின்மைப் போக்கை தடுத்து நிறுத்தாவிட்டால் அரசியல் வன்முறைகளை கட்டுப்படுத்துவது சாத்தியமில்லை என்பது அவர்களது அபிப்பிராயம்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் அமெரிக்கப் படைகளின் வெளியேற்றத்தையடுத்து ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மீண்டும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு அந்நாட்டில் மாத்திரமல்ல, பாகிஸ்தானிலும் இஸ்லாமிய மதப்பிரிவினருக்கிடையிலான வன்முறைகள் கடுமையாக அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

★★★★★

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

★ 1492 – உலகின் மிகப் பழைமையான விண்வீழ்கல் ‘என்சீசைம்’ பிரான்ஸில் கோதுமை வயல் ஒன்றில் வீழ்ந்தது.

★ 1665 – உலகின் பழைமையானதும் இப்போதும் வெளிவரும் ‘த லண்டன் கசெட்’ முதலாவது இதழ் வெளியானது.

★ 1910 – உலகின் முதலாவது விமானத் தபால் பொதிச் சேவை ரைட் சகோதரர்களால் ஒகையோவில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1918 – மேற்கு சமோவாவில் பரவிய ஒரு வித நச்சுநோய் காரணமாக 7,542 பேர் (20% மக்கள் தொகை) ஆண்டு முடிவிற்குள் இறந்தனர்.

★ 1931 – மா சே துங் சீன சோவியத் குடியரசை ஒக்டோபர் புரட்சியின் நினைவு நாளில் அறிவித்தார்.

★ 1987 – துனிசியாவில், அபீப் போர்கீபா தலைமையிலான அரசு கவிழ்க்கப்பட்டது.

★ 1994 – அமெரிக்காவின் வட கரொலினா பல்கலைக்கழக மாணவர் வானொலி நிலையம் உலகின் முதலாவது இணைய வானொலி சேவையை ஒலிபரப்பியது.

★ 2000 – இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தரநாயகம் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.






விவேகானந்தா தேசிய கல்லூரியின் புத்தாக்கக் கண்காட்சியை ஆரம்பித்துவைப்பதற்காக கல்வி உயர் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வருகை தந்தார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கலந்துகொண்டார். இதில் கல்லூரி அதிபர் சி.ரவிச்சந்திரிகா, உப அதிபர்கள் வீ.சாந்தகுமார், குணசுந்தரம், ஸ்டாலின் ரஞ்சிதம் உட்பட ஆசிரியர்கள் அயல் பாடசாலைகளின் அதிபர்கள், முன்னாள் அதிபர் இ. இராமையா, மேல் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.உதயகுமார், பெற்றோர்கள், பழைய மாணவ சங்க உப தலைவர் ரவீந்திரகுமாரன், பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர் நீரஜா மற்றும் பா.அ.சங்க உறுப்பினர்களும் இன்னும் பெருந்திரளான மக்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர். பாடசாலை மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. விவேகானந்தா கல்லூரியின் கண்காட்சி நிகழ்ச்சியின்போது முதலாம் இடத்தை மாணவன் சசிந்தாஸ் சங்கரதாஸ் பெற்றார். (மொஹமட் நசார்)

# தும்பு உற்பத்தியாளர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் ரிஷாட் எம்.பியுடன் கலந்துரையாடல்



புத்தளம், மதுரங்குளி தும்பு உற்பத்தியாளர்களுக்கும், மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனுக்கும் இடையிலான சந்திப்பு, நேற்று முன்தினம் (05) விருதோடை பகுதியில் இடம்பெற்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, தும்பு உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இங்கு கலந்தாலோசிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ரிஷாட் எம்.பி. கூறியதாவது,

"புத்தளம் மாவட்டத்தில் வாழ்கின்ற தும்பு உற்பத்தியாளர்கள் மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளனர். அவர்களின் உற்பத்திப் பொருட்களை, ஏற்றுமதியாளர்கள் 10 வருடங்களுக்கு முன்னர் என்ன விலையில் வாங்கினார்களோ அதே விலையில்தான் தற்பொழுதும் வாங்குகின்றனர்.

ஒருசில ஏற்றுமதியாளர்கள், தும்பு உற்பத்தியாளர்களை அடக்கி, ஒடுக்கி தமது ஏகபோக உரிமைகளை நிலைநாட்ட முற்படுகின்றனர். இதனால் சாதாரண உற்பத்தியாளர்களும் அவர்களை நம்பி வாழும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களும் பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன.

மேலும், ஏற்றுமதியாளர்கள் தும்பு உற்பத்திப் பொருட்களுக்கான உரிய விலையை வழங்காமல் இழுத்தடிப்புச் செய்வதனால், உற்பத்தியாளர்கள் தமது தொழிலை முன்கொண்டு செல்லமுடியாமல் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இதன் காரணமாக, இலங்கைக்கு பல மில்லியன் டொலர்களைப் பெற்றுக்கொடுக்கும் இந்த தும்பு உற்பத்தித்துறையானது, இல்லாமல் போகின்ற ஆபத்தான நிலை தென்படுகின்றது.

எனவே, அரசாங்கம், கைத்தொழில் அமைச்சு, ஏற்றுமதி அதிகாரசபை ஆகியன இந்த விடயத்தில் தலையீடு செய்வதன் மூலமே, தும்பு உற்பத்தியாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை களுக்குத் தீர்வு காண முடியும்" என்று கூறினார்.

அத்துடன், தும்பு உற்பத்தியாளர்களின் பொருட் களுக்கான சரியான விலையை நிர்ணயித்து வழங்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்றது என்பதையும் அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

# நாயக்கர்சேனை பாடசாலைக்கு அலி சப்ரி ரஹீம் எம்.பி. நிதியுதவி



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் கடந்த வெள்ளிக்கிழமை (4) நாயக்கர்சேனை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்தார்.

நாயக்கர்சேனை தமிழ் வித்தியாலய அதிபர் ஆர். வீரமநாதன் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து தளபாடங்கள் மற்றும் போட்டோ கொப்பி இயந்திரம் என்பவற்றையும் வழங்கினார்.

அத்துடன், இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த அதிபர் காரியாலய கட்டடத்தையும் தனது 2022 பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து பூர்த்திசெய்ததுடன், அக்கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

இதேவேளை, குறித்த பாடசாலை பிரதான மண்டபம் மழை காலங்களில் மாணவர்கள் இருந்து கல்வி கற்கமுடியாத நிலையில் இருப்பதாகவும், அதை திருத்தித் தருமாறும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் அதிபர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர்.

எனினும், இந்த வருடத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடு இல்லாததால் இவற்றை திருத்த தனது சொந்த நிதியிலிருந்து ஒரு தொகைப்பணம் தருவதாக இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் வாக்குறுதியளித்தார்.

இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் தில்லையடி அமைப்பாளரும் நகர சபை உறுப்பினருமான நகுலன் ராஜி, இடம்பெயர்ந்த யாழ். மக்களின் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ஆசிரியர் அமீர் அலி, புழுதிவயல் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ஐயூப்கான், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜவ்ஸி ஜமால்தீன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினரின் சேவைகளைப் பாராட்டி பாடசாலை அதிபரால் நினைவுச்சின்னம் ஒன்றும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சு.க. அமைப்பாளராக அஸாம் ரபீக் நியமனம்



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கேகாலை மாவட்ட அமைப்பாளராக அஸாம் ரபீக்கு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் 30/10/2022 அன்று கொழும்பிலுள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து நியமனம் வழங்கப்பட்டது. இதில் கேகாலை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த மித்ரபாலவும் கலந்துகொண்டனர்.

கேகாலை மாவட்ட அமைப்பாளர் அஸாம் ரபீக், மாவனல்லை பிரதேச சபை உறுப்பினருமாவர். மடுல்போவை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியையும், ஹெம்மாதகம அல்-அஸ்ஹர் கல்லூரியில் தனது உயர்கல்வியையும் பயின்ற இவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் மர்ஹூம் ஏ.ஆர்.எல்.எம்.ரபீக் தம்பதிகளின் புதல்வரும், அமுருப்ப மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசலின் பிரதம நம்பிக்கையாளரும், அல்-அஸ்ஹர் தேசிய கல்லூரியின் அபிவிருத்திச் சங்க செயற்குழு உறுப்பினருமாவார்.

# துருக்கிக்கான இலங்கையின் தூதுவர் நற்சான்றிதழின் பிரதியை கையளிப்பு



துருக்கிக் குடியரசிற்கான இலங்கைத் தூதுவர் எஸ்.ஹசந்தி உருகொடவத்த திஸாநாயக்க, அண்மையில் தூதரகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டதையடுத்து, 2022 நவம்பர் 02ஆம் திகதி துருக்கியின் வெளியுறவு அமைச்சின் உபசரணைப் பணிப்பாளர் நாயகத்திடம் தனது நியமனத்திற்கான நற்சான்றிதழின் திறந்த பிரதிகளை கையளித்தார்.

எஸ்.ஹசந்தி உருகொடவத்த திசாநாயக்க, ஜப்பான், சுவீடன், இத்தாலி, சீனா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றிய வெளிநாட்டுச் சேவையில் 26 வருடங்களுக்கும் மேலான அனுபவமுள்ள தொழில் இராஜதந்திரியாவார். அவர் 2015 - 2019 வரை வியட்நாமிற்கான இலங்கைத் தூதுவராக பணியாற்றினார்.

கொழும்பில், அவர் பொருளாதாரம், ஐ.நா. மற்றும் பல்தரப்பு,அரசியல் மற்றும் உபசரணை விவகாரங்களை உள்ளடக்கிய அமைச்சின் பல பிரிவுகளில் பணியாற்றியுள்ளார்.

அங்காராவில் கடமைகளை பொறுப்பேற்றுக்கொள்வதற்கு முன்னர், அவர் சமுத்திர விவகாரங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவின் மேலதிக செயலாளராக செயற்பட்டார்.

# ஐயப்ப சுவாமி கும்பாபிஷேகம்

(உடப்பு செய்தியாளர்)

புத்தளம் மாவட்டம் உடப்பு, வம்பிவட்டான் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஐயப்ப சுவாமி ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.44 மணிதொடக்கம் 10.24 மணிவரை சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

9ஆம் திகதி விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு, 10ஆம் திகதி அதிகாலை 5.30 மணிமுதல் மாலை 4 மணிவரையும் பக்தர்களின் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும்.

கும்பாபி ஷேகத்தைத் தொடர்ந்து,12நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். பிரதிஷ்டா பிரதம குரு விப்ர சிரேஷ்டர் விஷ்ணு வித்தியா சாகரம் உடப்பூர் சிவஸ்ரீ குமார பஞ்சாட்சரக் குருக்கள் கலந்துகொண்டு நிகழ்வுகளை நடத்துவார்.





வட்டவான் ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான நவராத்திரி போட்டி நிகழ்வுகள் நேற்று முன்தினம் (5) சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் சி.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, சி.தனபாலசிங்கம், புத்தளம் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி விமலரஞ்சனி ஆகியோர் உரையாற்றுவதையும் மாணவர்கள் போட்டிகளில் ஈடுபடுவதையும் படத்தில் காணலாம். (உடப்பு செய்தியாளர்)

# நிர்வாகக் காலம் முடிவடைந்த பள்ளிவாசல்களுக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமிக்க அனுமதி

(உக்குவளை ஜலீல்)


நிர்வாகக் காலம் முடிவடைந்த நாட்டிலுள்ள பள்ளிவாசல்களுக்கான நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமிப்பதற்காக வக்பு சபை அனுமதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தங்களது வக்பு சட்ட யாப்பு மற்றும் கடந்த கால நடைமுறைக்கு இணங்கவும் தெரிவுகள் தொடர்பாக திணைக்கள நடைமுறைகளைப் பின்பற்றி புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர்களைத் தெரிவுசெய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தெரிவின்போது மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் முஸ்லிம் சமூக, கலாசார திணைக்கள இணைப்பதிகாரிகளின் வரவுடன், அவர்களது மேற்பார்வையில் அவர்களது அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொண்டு செயல்படுமாறும் பொறுப்பாளர்கள் தெரிவின்பின் அதுபற்றி கலாசார திணைக்களத்துக்கு அறிவித்து சட்டரீதியான பதிவைப் பெற்றுக்கொள்ளுமாறும் கலாசார திணைக்களப் பணிப்பாளர் இப்ராஹீம் அன்சார் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கொழும்பு, புதுச்செட்டித்தெரு சாயி மத்திய நிலையத்தால் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட சாயி பஜனை நூல்களை சாயி நிலையத் தலைவர் எஸ்.என்.உதயநாயகனின் சார்பில் சாயி மகளிர் சங்கத் தலைவி திருமதி சர்வகுணதேவி சண்முகநாதன், வட இந்தியாவிலுள்ள புட்டபர்த்தி சத்ய சாயி பாபா அறங்காவலர் சபைத் தலைவர் சாயி ஸ்ரீ ரத்னாகாரரிடம் கடந்த 4ஆம் திகதி வைபவரீதியாக கையளித்தார்.




# பெருந்தோட்ட வீடுகளுக்கு உறுதிப்பத்திரத்தை வழங்கக் கோரி நுவரெலியாவில் போராட்டம்!






(செ.திவாகரன்)

1987ஆம் ஆண்டு முதல் கட்டப்பட்ட 37,000 பெருந்தோட்ட வீடுகளுக்கு சட்ட ரீதியான உறுதிப்பத்திரத்தை வழங்குமாறு கோரி கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தினரும், சில சிவில் அமைப்புகள் இணைந்து நேற்று (06) காலை நுவரெலியா பிரதான அஞ்சல் அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது போராட்டக்காரர்களால் எமக்கு வேண்டும் தனி வீடுகள், 37ஆயிரம் வீடுகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்கு, தோட்டத்தொழிலாளர் இந்த நாட்டின் பிரஜைகள் - அவர்கள் சமமாக மதிக்கப்பட வேண்டும், எமது நில உரிமையை உடனடியாக பெற்றுத்தாருங்கள், பழைமையான வீட்டு வாழக்கை போதும் போன்ற எதிர்ப்பு பதாகைகளை ஏந்திய வண்ணம் போராட்டக்காரர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், 1987ஆம் ஆண்டின் பின்னர் பெருந்தோட்டங்களில் கட்டப்பட்ட வீடுகளுக்கு வீட்டுரிமைப் பத்திரங்களை வழங்குமாறு கோரி ஜனாதிபதிக்கு கையளிப்பதற்கான மகஜர் ஒன்றில் கையொப்பங்கள் திரட்டுவதற்கு நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடம், அஞ்சல் அலுவலகத்திற்கும் முன்பாக நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

# பஸ் விபத்தில் உயிரிழந்த நாவலப்பிட்டி மாணவியின் உடல் நேற்று நல்லடக்கம்

வவுனியா பஸ் விபத்தில் உயிரிழந்த நாவலப்பிட்டி மாணவி ராமகிருஷ்ணன் சயகரியின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக நாவலப்பிட்டி நகரிலுள்ள அன்னாரது வீட்டில் வைக்கப்பட்டு, நேற்று மாலை 4.30 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

வவுனியா - நொச்சுமோட்டை பகுதியில் நேற்று முன்தினம் (05) அதிகாலை இடம்பெற்ற

ராமகிருஷ்ணன் சயகரியின் பெற்றோர், விசேட தேவையுடையவர்கள் என்பதோடு, சகோதரன் மற்றும் சகோதரியைக் கொண்ட குடும்பத்தில், ராமகிருஷ்ணன் சயகரி மூத்த பிள்ளை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அன்னாரது இறுதிக் கிரியைகள் நேற்று (06) மாலை நாவலப்பிட்டியிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, மாலை 4.30



வாகன விபத்தில் 23 வயதான ராமகிருஷ்ணன் சயகரி உயிரிழந்திருந்தார்.

உரிழந்த மாணவி யாழ்.பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீடத்தில் முதலாமாண்டில் கல்வி பயில்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மணிக்கு உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

வவுனியா பகுதியில் நேற்று அதிகாலை பஸ் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து, விபத்துக்குள்ளானதில், பஸ்ஸின் சாரதி உள்ளிட்ட மூவர் உயிரிழந்திருந்தனர்.

# கால்வாயைக் கடக்க முற்பட்ட 10 வயது சிறுமி நீரில் மூழ்கி உயிரிழப்பு

கொத்மலை, வெதமுல்ல பகுதியில் சிறுமியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

அந்த பகுதியில் உள்ள கால்வாய் ஒன்றை கடக்க முயன்றபோது, குறித்த சிறுமி நீரில் அடித்துச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் பிரதேசவாசிகள் சிறுமியை கண்டுபிடித்து நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர் உயிரிழந்துள்ளார்.

வெதமுல்ல - கெமில்டன் பகுதியைச் சேர்ந்த 10 வயதுடைய சிறுமியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த சிறுமி தனது சகோதரியுடன் கால்வாயைக் கடக்க முற்பட்டபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# விக்டோரியா நீர்த்தேக்கத்தில் ஆறு தன்னியக்க வான்கதவுகள் திறப்பு

(கண்டி செய்தியாளர்)

விக்டோரியா நீர்த்தேக்கத்தின் 8 வான் கதவுகளில் 6 வான்கதவுகள் தன்னியக்க அடிப்படையில் திறந்துள்ளன.

மகாவலி நீரேந்துப் பகுதிகளில் மாலை வேளை பெய்த கடும் மழை காரணமாக மேற்படி வான் கதவுகள் தன்னியக்கமாக இரவு 7 மணியளவில் திறந்ததாக விக்டோரியா நீர்த்தேக்க கடமைநேர பொறியியலாளர் வசந்த ஹெகலபிட்டிய தெரிவித்தார்.

இதேவளை விக்டோரியா நீர்த்தேக்கத்தின் தன்னியக்க வான்கதவுகள் இரண்டு கடந்த முதலாம் திகதி அதிகாலையும் திறந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

மலையகப் பிரதேசங்களில் பெய்துவரும் கடும் மழை காரணமாக இவ்வாறு 6 வான் கதவுகள் திறந்ததாகவும் இதன்போது தொடர்ந்து மழை பெய்து வருவதால் இவ்வாறு தன்னியக்க கதவுகள் திறக்க இடமிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

722 மில்லியன் கனமீற்றர் கொள்ளவைக் கொண்ட இந்நீர்தேக்கத்தில் தற்போது ஒரு வான் கதவு திறக்கப்பட்டால் வினாடிக்கு 80 கனமீற்றருக்கும் அதிகமான நீர் ரந்தெனிகல நீர்த்தேக்கத்திற்கு விடுவிக்கப்படுவதாகவும் தற்போது சுமார் 670 கனமீற்றர் நீர் வெளியேற்றப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். தற்போது ரந்தெனிகல நீர்த்தேக்கத்தில் 80 சதவீதத்திற்கு மேல் நீர் நிரம்பியுள்ளதாகத் கடமைநேர பொறியியலாளர் மேலும் தெரிவித்தார்.

---

**பாடசாலை மாணவர்கள் மத்தியில் உருவாகியுள்ள**

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதன்**

(மன்னார் நகர் நிருபர்)



மன்னார் மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் உருவாகியுள்ள போதைப்பொருள் பாவனையால் ஏற்படக்கூடிய தீமையான விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள் என்பன சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் உள்ள பல பாடசாலைகளில் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதாரத்துறையினரும் கல்வித்துறையினரும் இணைந்து பாடசாலை மாணவர்கள் மத்தியில் உருவாகியுள்ள போதைப்பொருள் பாவனையால் ஏற்படக்கூடிய தீமையான விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள், நிகழ்ச்சிகளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள பாடசாலைகளில் முன்னெடுத்தனர்.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை பாடசாலை சமூகத்தில் தற்போது ஏற்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பெற்றோரின் சம்மதத்துடன் சிகிச்சைகளை நாடிவரும் ஆரோக்கியமான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் – என்றார்.

# வவுனியா விபத்தில் யாழ். பல்கலை மாணவி உட்பட மூவர் மரணம்

(வவுனியா நிருபர்)



வவுனியா விபத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவி உட்பட மூவர் பலியாகிய நிலையில், அவர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

யாழிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற அதிசொகுசு பஸ் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வவுனியா, நொச்சி மோட்டை பாலத்தில் மோதி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மூவர் மரணமடைந்ததுடன், 16 பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களின் 4 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த விபத்தில் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீட மாணவியான நாவலப்பிட்டியைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் சயகரி (வயது 23), சாரதியான கோவிலடி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ்.சிவரூபன் (வயது 32), தம்பசிட்டி, பருத்தித்துறையைச் சேர்ந்த இராமலிங்கம் நிதர்சன் (வயது 24) ஆகியோரே மரணமடைந்தவர்களாவர். சடலங்கள் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

# பஸ்ஸிலிருந்து தவறி விழுந்த தாதிய உத்தியோகத்தர் மரணம்

(சாவகச்சேரி நிருபர்)

பஸ்ஸிலிருந்து தவறி விழுந்த தாதிய உத்தியோகத்தர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (05) இரவு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் திருகோணமலையிலிருந்து யாழ். நோக்கி வந்த பஸ் பளை பகுதியில் வீதியின் நடுவே நின்ற மாட்டைக் காப்பாற்ற முற்பட்ட வேளையில் குறித்த தாதிய உத்தியோகத்தர் பஸ்ஸிலிருந்து தவறி வீதியில் விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

பின்னர் குறித்த உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் விமல்ராஜ் என்ற இளம் தாதிய உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் தனியார் விருந்தினர் விடுதியொன்றின் பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றின் பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது வன்முறைக் கும்பலொன்று வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

அச்சுவேலி பத்தமேனி பகுதியைச் சேர்ந்த சதீஸ்குமார் சிந்துஜன் என்பவர் மீதே இவ்வாறு வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன், விடுதியின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை நேற்று முன்தினம் (05) அதிகாலை 5 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அடங்கிய வன்முறைக் கும்பலே தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் காயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நல்லூரிலிருந்து கதிர்காமத்திற்கு திருத்தல தரிசன யாத்திரை

(யாழ். நிருபர்)



இலங்கையில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், இனங்களுக்கு இடையேயான பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டி யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்திற்கு புனித திருத்தல தரிசன யாத்திரை ஆரம்பமாகியுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று முன்தினம் (05) வழிபாடுகளை மேற்கொண்டு விசேட பஜனை வழிபாடுகளுடன் யாத்திரை ஆரம்பமாகியுள்ளது.

ஐப்பசி மாத திருக்கார்த்திகையை முன்னிட்டு ஆரம்பமாகியுள்ள இந்த யாத்திரை, மூன்று தினங்களாகக்கொண்டு, கைதடிப் பிள்ளையார் ஆலயம், முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம், வவுனியா வேப்பங்குளம் பத்திரகாளி அம்மன் ஆலயம், திருகோணமலை தென்கயிலை ஆதீனம், கன்னியாச் சிவன் ஆலயம், திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆலயம், திருக்கோணேஸ்வரம் சிவன் ஆலயம், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் இரவுவேளை தங்கி தொடர்ந்து கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம் உட்படப் பல ஆலய தரிசனங்களுடன் கதிர்காமக் கந்தன் ஆலயம் சென்று அங்கு பூஜை வழிபாடுகளில் கலந்துகொள்வதுடன், அடியார்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றி மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# யாழில் கடந்த 11 மாதங்களில் டெங்கினால் 08 பேர் உயிரிழப்பு!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 11 மாதங்களில் டெங்கு காய்ச்சலினால் 2,774 பேர் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாகவும், 08 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் யாழ். மாவட்ட பிராந்திய சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஊடகங்களை சந்தித்தபோதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நவம்பர் 4ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 2,774 வரையானோர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், இந்த வருடத்தில் 8 டெங்கு நோய் இறப்புகள் பதிவாகியுள்ளன.

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து மாத ரீதியாக பார்க்கின்றபோது ஜனவரி மாதத்திலிருந்து படிப்படியாக அதிகரித்து மே - ஜூன் மாதமளவில் ஒரு அதிகரித்த பரம்பல் காணப்பட்டது. பின்பு குறைவான நிலை காணப்பட்டு கடந்த ஒக்டோபர் மாதம் முதல் மீண்டும் டெங்கு நுளம்பானது அதிகரித்து செல்வதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது - என்றார்.

# நான்காம் காலாண்டுக்குரிய கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம் யாழில்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்ட செயலக நான்காம் காலாண்டுக்குரிய கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (04) செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம கணக்காளர், இணைய நிகழ்நிலை வழியாக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர் (Department of Management Audit), மாவட்ட செயலகக் கணக்காய்வு உத்தியோகத்தர், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலக உள்ளக கணக்காய்வாளர், பிரதேச செயலர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக கணக்காளர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# CBL Nutriline சோளம் மற்றும் பல்தானிய சிப்ஸ் – நகரத்தில் புதிய காலை உணவு




மிகவும் சுவையுள்ள, சிறுவர்களால் அதிகம் விரும்பப்படும் சிறந்த தரம் மற்றும் சர்வதேச தர நிலையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஊட்டச்சத்துமிக்க மாற்று உணவுப்பொருளாகத் திகழும், சத்துள்ள பல்தானிய உணவு சீரியல்களை வழங்குவதில் முன்னணியாளரான CBL Nutriline மகிழ்ச்சியான மற்றும் ஆரோக்கியமான காலை உணவான CBL Nutriline சோளம் மற்றும் பல்தானிய சிப்ஸ்ஐ புதிதாக அறிமுகப்படுத்தியுள்ளது.

முழுக் குடும்பத்தினதும் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி அவர்கள் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையைக் கொண்டுசெல்வதற்கு உதவும் வகையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள CBL Nutriline சோளம் மற்றும் பல்தானிய சிப்ஸ் ஆனது நூறுவீதம் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சோளம், அரிசி, கௌப்பி மற்றும் பச்சைப் பயறு ஆகியவற்றைக்கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். தனித்துவமான சிப்ஸை பால் அல்லது யோகட், நட்ஸ் அல்லது பழங்களுடன் இணைத்து ஆகாரத்துக்கு எடுத்துக்கொள்ள முடியும்.

# வணிக ரீதியான வாகனங்களையும் உள்ளடக்கும் வகையில் மடப்பாத்த DPMC Workshop இன் வசதிகள் விஸ்தரிப்பு




நிலவும் பொருளாதாரப் பின்னடைவுமிக்க சூழலில் வினைத்திறனை அதிகரிக்கும் அதேநேரம், வளங்களை அதிகப்படுத்தி நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது முக்கியமானதாகும். மேலும், வழங்கப்பட்டுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகள், வணிக ரீதியான சரக்குப் போக்குவரத்துகளைப் பராமரிப்பது என்பன அனைத்து பெரு நிறுவனங்களுக்கும் இன்றியமையாததாகும். போக்குவரத்துத் தொகுதிகளை சரியான நேரத்தில் பராமரிப்பது மற்றும் உடனடியான திருத்தங்களை மேற்கொள்வது, பழுதடைவுகளைக் குறைப்பதுடன், வினைத்திறனான எரிபொருள் பயன்பாட்டை அதிகரித்து, வேலைகள் நிறுத்தப்படுவதைக் கட்டுப்படுத்தி வாடிக்கையாளர்களின் திருப்தியை மேம்படுத்த முடிவதுடன், எவ்வித சிரமங்களுமின்றி நாளாந்த விநியோகங்களை மேற்கொள்ள முடியும்.

இது தொடர்பில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் வகையில் மடப்பாத்தவிலுள்ள DPMC Workshop தற்பொழுது, மினி கப்ஸ், படி லொறி, பஸ், சிங்கிள் டபிள் கப்ஸ், பிரீஸர் லொறிகள், ரிப்பர்கள், கொள்கலன் டெய்லர் மற்றும் பிரைம் மூவர்ஸ் போன்ற வணிக ரீதியான வாகனங்களுக்கான வசதிகளைக் கொண்டுள்ளது. இதற்கு ஒரு படி மேல் சென்று ஒட்டுமொத்த பராமரிப்பு பங்காளர்களாக நியமிக்கும் கம்பனிகளுக்கு வீதியோர உதவிகளை வழங்குவதற்கும் முன்வந்துள்ளது. இதனூடாக பெருநிறுவனங்கள் தமது பணிகளைச் செய்யும் அதேநேரம், விசேட நிபுணத்துவம் பெற்றவர்களால் போக்குவரத்துத் தொகுதிகளை உரிய நேரத்தில் பராமரித்து, பழுதுபார்த்தல்களை மேற்கொண்டு தடையின்றி தமது சேவைகளை மேற்கொள்ள முடியும்.

இலங்கையின் ஓட்டோமோட்டிவ் தொழில்துறையில் முன்னணியாளராகத் திகழும் டேவிட் பீரிஸ் குழுமத்தின் உறுப்பினரான மடப்பாத்த DPMC Workshop ஆனது, நம்பிக்கை, தொழில்சார் நிபுணத்துவம், சிறந்த வாடிக்கையாளர் சேவை என்பவற்றினால் தசாப்தங்களாக நற்பெயரைப் பெற்றுள்ளது.

DPMC இன் பிரதிப் பொது முகாமையாளர் (சேவைகள்) சன்ன ரணவக்க குறிப்பிடுகையில், வெள்ளை/கறுப்புப் புகை, குறைந்த இழு சக்தி, அதிக எரிபொருள் நுகர்வு, பிரேக் டிரம்கள் அல்லது கூலிங் சிஸ்டம்கள் அதிக வெப்பமடைதல் மற்றும் பல்வேறு இடைநீக்கம் மற்றும் டிரைவ் டிரெய்ன் தொடர்பான பழுது போன்ற பல பொதுவான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படுகிறது. வாகனங்களுக்கு அவ்வப்போது சேர்விஸ் மேலதிகமாக வழங்கப்படும் - என்றார்.

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மருத்துவ உதவித் தேவைகளுக்கான நன்கொடைகளுக்கு இணைப்புப் பாலமாக Elixir இயங்குதளத்தை ஆரம்பிக்கவுள்ளது



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இலங்கையின் முதல் மருத்துவ-விநியோக-நன்கொடை இணைப்புத் தளத்தை 2022 ஒக்டோபர் 19 அன்று அறிமுகப்படுத்தியுள்ளது. Elixir Platform என அழைக்கப்படும் இந்த முயற்சியானது, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னார்வ, அரச-தனியார் கூட்டாண்மை என்பதுடன், இலங்கை முழுவதும் உள்ள மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை மையங்கள், நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் அந்நியச் செலாவணி நெருக்கடிகள் காரணமாக பற்றாக்குறையாக உள்ள உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களுக்கான தேவைகளைப் பதிவு செய்ய இடமளிக்கிறது.

இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவளிக்க விரும்பும் நன்கொடையாளர்களுக்கு ஒற்றை, நெறிப்படுத்தப்பட்ட இடைமுகத்தையும் Elixir வழங்குகிறது. அனைத்து தேவைகள் மற்றும் நன்கொடைகள் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் தங்குதடையற்ற தளம் வழியாக வருவதன் மூலம், நிதி மற்றும் நேரத்தை திறம்பட பயன்படுத்துவதற்கான தேவைகள் மற்றும் நன்கொடைகளை Elixir ஆல் சிறப்பாக இணைக்க முடியும் அதே நேரத்தில், உதவிக்கான மொத்த நடவடிக்கை நேரத்தை குறைப்பதுடன், வெளிப்படைத்தன்மையையும் அதிகரிக்கிறது.

# 'செவ் தேசடம டயலொக்' டயகமவில் புதிய தொலைத்தொடர்பு கோபுரம்



இலங்கையின் முன்னணி தொடர்பாடல் வலையமைப்பான டயலொக், இலங்கை முழுவதிலுமுள்ள தொலைதூர கிராமப்புறங்களில் இணைப்பை விரிவுபடுத்தும் நிறுவனத்தின் வாக்குறுதிக்கு இணங்க நாற்திசையும் டயலொக் திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் டயகம கிராமத்தில் புதிய தொடர்பாடல் கோபுரத்தை அண்மையில் நிர்மாணித்துள்ளது.

இந்தப் புதிய டயகம தொலைத்தொடர்பு கோபுரமானது மேலும் சில கிராமங்களான கந்தப்பளை, அக்கரைப்பத்தனை மற்றும் பதியபலெல்ல ஆகிய கிராமங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஒவ்வொரு மூளைமுடுக்கிலும் உள்ளவர்களை இணைப்பதன் மூலம் அவர்களை வலுவூட்டும் மற்றும் வளப்படுத்தும் இந்த பயணத்தில் இது ஓர் அங்கமாகும்.

களுத்தறை மாவட்டத்திலுள்ள ஹல்தொல, அகலவத்த மற்றும் ருணகந்த ஆகிய கிராமங்களிலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள முடுகல மற்றும் தவளஹிந்த ஆகிய கிராமங்களிலும் இக்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிய அபிவிருத்தி வங்கியின்(ADB) வர்த்தக மற்றும் நிதி விநியோக சங்கிலியில் 'இலங்கையின் முன்னணி பங்காளி வங்கியாக' கொமர்ஷல் வங்கி பிரகடனம்



ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) 'இலங்கையின் முன்னணி பங்காளி வங்கி' என்ற கௌரவம் கொமர்ஷல் வங்கிக்கு 2022இல் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகக் கிடைத்துள்ளது.

வர்த்தக மற்றும் நிதி விநியோக சங்கிலி திட்டத்தின் கீழ் (TSCFP) இந்த அந்தஸ்து கிடைத்துள்ளது. இது ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் தனது திட்டங்களுக்கு வழங்கும் பங்களிப்புக்கான அங்கீகாரமாக ADB வழங்கும் கௌரவமாகும்.

இலங்கையில் ADB வழங்கும் உதவிகளை 2021 ஜூலை 01ஆம் திகதி முதல் ஜூன் 30, 2022 வரையான காலப்பகுதியில் பதிவு செய்தல், வர்த்தக மற்றும் நிதி விநியோக சங்கிலித் தொடரில் இலங்கையில் ஆகக்கூடுதலான எண்ணிக்கையிலான கொடுக்கல், வாங்கல்கள் என்பனவற்றுக்காகவே இந்த கௌரவம் கிடைத்துள்ளது.

# சூரிய மின்வலுப் பிறப்பாக்கலினூடாக புதுப்பிக்கத்தக்க வலுப் பயன்பாட்டை ஆரம்பிக்கும் ஹேமாஸ்

## கூரையின் மீதான படல்கள் பொருத்துகையினூடாக மின் கட்டமைப்பின் மின்சாரப் பாவனையை 25% இனால் குறைக்க நடவடிக்கை




தொடர்ச்சியான நிலைபேறான வியாபார செயற்பாடுகளை முன்னெடுப்பதை உறுதிசெய்யும் வகையில் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியினால் புதுப்பிக்கத்தக்க வலுவை பயன்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குழுமத்தின் 2030ஆம் ஆண்டை நோக்கிய சூழல் நிகழ்ச்சி நிரலின் அங்கமாக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குழுமத்தின் பெருமளவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் பகுதிகளில் ஹேலீஸ் சோலரின் புதுப்பிக்கத்தக்க வலு உற்பத்திப் பிரிவான ஃபென்டன்ஸ் லிமிடெட்டினால் ஹேமாஸ் நிறுவனத்தின் தொழிற்சாலைப் பகுதிகளின் கூரைகளின் மீது சூரியப் படல்களைப் நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் தேசிய மின் வழங்கல் கட்டமைப்பிலிருந்தான மின்பாவனை 25 சதவீதத்தினால் குறைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். இதனூடாக சூழலுக்கு ஏற்படும் தாக்கமும் குறைக்கப்படுவது உறுதிசெய்யப்படும்.

வளிமண்டலத்தில் காபன் வெளியீட்டைக் குறைப்பதற்கு மேலதிகமாகவும், ஓசோன் படலம் பாதிப்படைவதைத் தணிப்பதில் பங்களிப்பு வழங்கும் வகையிலும், மாற்றுவலு மூலங்களை பயன்படுத்துவதை ஆரம்பிக்கும் வகையில் ஹேமாஸ் ஹோல்டிங்ஸ், நிலக்கரி தட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுக்க தன்னைத் தயார்ப்படுத்திய வண்ணமுள்ளது.

ஏனைய கூட்டாண்மை நிறுவனங்களையும் புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களை பயன்படுத்த ஊக்குவிக்கும் முன்மாதிரியான நிறுவனமாக திகழ்வதற்கு ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் எதிர்பார்ப்பதுடன், அதனூடாக புதிய வியாபார வழமையாக இதனை மாற்றியமைத்து இலங்கையில் மொத்த சூழல் தாக்கத்தை தணிப்பதற்கு பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும்.

தனது சூழல்சார் நிகழ்ச்சிநிரலினூடாக சூழல் பாதுகாப்பு தொடர்பான பங்காண்மைகளினூடாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஹேமாஸ் தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், பொறுப்புவாய்ந்த வகையில் இயற்கை வளங்களை பயன்படுத்துவதைத் தணிப்பதற்கும் செயற்பாடுகளின் தாக்கத்தை குறைப்பதற்கும் பிளாஸ்ரிக் பயன்பாட்டைக் குறைத்து சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

# கொழும்பு செங்ரீலா ஹோட்டலில் அபிமானத்துடன் நடந்து முடிந்த William Angliss கல்லூரியின் 8ஆவது பட்டமளிப்பு விழா



SLIIT பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள William Angliss Institute கல்லூரியின் 8ஆவது பட்டமளிப்பு விழா அண்மையில் கொழும்பு செங்ரீலா ஹோட்டலின் "கிராண்ட் போல்" மண்டபத்தில் அபிமானத்துடன் நடைபெற்றது.

அவுஸ்திரேலியாவின் வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையைச் சேர்ந்த ஆறு அங்கத்தவர்கள், வில்லியம் அங்லீஸ் இலங்கை நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், சுற்றுலா மற்றும் சமையற் கலைத்துறையைச் சேர்ந்த சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் என ஏராளமானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்கள்.

பாரம்பரிய மேள தாளங்களுடன் தொடங்கப்பட்ட பட்டமளிப்பு விழாவை, முகாமைத்துவ மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் அரங்கேற்றிய பாரம்பரிய நடனம் மேலும் அலங்கரித்தது. அவுஸ்திரேலியாவின் வில்லியம் அங்லீஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி நிக்கலஸ் ஹன்ட் வரவேற்புரை நிகழ்த்தினார்.

# ஏசியா அசெட் /பினான்ஸ் பிஎல்சி, 2022/23 நிதியாண்டின் முதல் பாதியில் வரிக்குப் பின்னரான இலாபம் அதிகரிப்பு

- ★ வரிக்கு முன்னரான இலாபம் - 197.5%
- ★ மூலதன போதுமை விகிதம் - 25.44%
- ★ தங்கக் கடன் வளர்ச்சி- 71.63%
- ★புதிய கிளைகளின் மொத்த எண்ணிக்கை 65




இலங்கையில் 52 வருட வரலாற்றைக் கொண்டுள்ளதுடன், தங்கத்தை மையமாகக்கொண்ட ஒரேயொரு நிதியியல் தீர்வுகள் வழங்குநரான ஏசியா அசெட் / பினான்ஸ் பிஎல்சி (Asia Asset Finance PLC), வரிக்குப் பின்னரான இலாபத்தில் 328.57% வருடாந்த வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அதன்படி, நிறுவனம் முந்தைய ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாக்கியிருந்த வெறும் ரூபா 35 மில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூபா 150 மில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்தைப் பதிவு செய்துள்ளது. தேறிய வட்டி வருமானமும் முன்னர் பதிவாக்கப்பட்ட ரூபா 508 மில்லியன் தொகைக்கு எதிராக, இறுக்கமான பணச் சூழலின் பின்னணியில் மதிப்பாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் 79.72%ஆல் அதிகரித்து ரூபா 913 மில்லியனாக உயர்ந்துள்ளது. மேலும், 2022 செப்டெம்பர் 30இல் முடிவடைந்த 6 மாதங்களில் ஏசியா அசெட் / பினான்ஸ் பிஎல்சி தனது கிளை வலையமைப்பை 2021 செப்டெம்பர் இறுதியில் காணப்பட்ட 45 இடங்களிலிருந்து, நாடு முழுவதும் 65 இடங்களுக்கு வெற்றிகரமாக விரிவுபடுத்த முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்னணி உள்நாட்டு பால் வர்த்தக நாமமான பெல்வத்தை புதிய Chilli Butter தயாரிப்பை வெளியிடுகிறது

## புதிய அளவிலான சிலோன் வெண்ணெய் பொதிகளும் அறிமுகம்



உள்நாட்டின் செழுமை

பலவேறு வகையான பால் பொருட்களை உற்பத்திசெய்யும் இலங்கையின் முன்னணி உள்ளூர் பால் வர்த்தக நாமங்களில் ஒன்றான Pelwatte Dairy, பால் பிரியர்களுக்காக அதன் சமீபத்திய Pelwatte Dairy, வகை உற்பத்தியை அறிமுகப்படுத்துகிறது. Chilli Butter (மிளகாய் வெண்ணெய்) சுவை கொண்ட வெண்ணெய், மேலும் மெருகூட்டப்பட்ட பால் உற்பத்தியாக இலங்கை சந்தையில் அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும். Pelwatte Chilli Butterஆனது, அதிக கொழுப்புள்ள பால் பொருளாகும். இது உணவு உட்கொள்வதற்கான பசியை அதிகரிப்பதுடன், ஆரோக்கியத்தை மேலும் அதிகரிக்க உதவுகிறது. பால் கொழுப்பு, உண்ணக்கூடிய உப்பு, வறுத்த இயற்கை மிளகாய்த்தூள், வறுத்த இயற்கை மிளகாய் துகள்களுடன், பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட புதிய பசும்பாலைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு, 200 கிராம் கொண்ட கோப்பைகளில் வெளிவருகிறது.

விரிவான சந்தை ஆராய்ச்சியை அடுத்து, வெண்ணெய் மசாலா மற்றும் அதன் உவர்ப்புத் தன்மையின் சிறந்த கலவையை சுவைக்க விரும்புபவர்களுக்காக, இந்த புதிய வெண்ணெய் உற்பத்திகளை சந்தையில் அறிமுகப்படுத்த பெல்வத்தை நிறுவனம் முடிவு செய்தது. Pelwatte Chilli Butter ஆனது, ஏற்கனவே பெல்வத்தை உற்பத்தி செய்யும் கிரீமான மற்றும் சுவையான வெண்ணெய்க்கு மேலும் சுவையான மிளகாய் மெருகூட்டலை சேர்க்கிறது. இது தமது உணவில் ஒரு மாற்றத்தை விரும்பும் நுகர்வோருக்கு ஒரு முழுமையான மகிழ்ச்சியான அனுபவமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பெல்வத்தை நிறுவனம், தனது புதிய வெண்ணெய் உற்பத்திக்கு மேலதிகமாக தற்போது காணப்படும் Pelwatte Ceylon Butter உற்பத்தியின் புதிய அளவிலான பொதிகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இது 3 வெவ்வேறு அளவுகளைக் கொண்ட பொதிகளில், 200 துண்டுகள், 30 துண்டுகள், 8 துண்டுகள்கொண்ட ஸ்மார்டான் பொதிகளில் வருகிறது.

Ceylon Butterஆனது 10 g துண்டுகளாக பொதி செய்யப்பட்டு, உயர் சுகாதாரத்துடன், புதிய உள்ளூர் பால் கிரீம்களைப் பயன்படுத்தி சிறிய தொகுதிகளாக தயாரிக்கப்படுகின்றன. 82% ஆன இலங்கையின் தூய பால் கொழுப்பு, 16% இற்கும் குறைவான ஈரப்பதன், 16% இற்கும் குறைவான பால் திண்ம கொழுப்பு, 1.35% இற்கும் குறைவான உப்பு ஆகியனவே Pelwatte Dairy(சிலோன் வெண்ணெய்) உற்பத்தியின் முதன்மையான மூலப்பொருட்களாகும்.

# தனியார்துறை மற்றும் பெருநிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் மனிதநேய ஒன்றிணைவு நிவாரணத் திட்டத்துடன் London Stock Exchange குழுமம் கைகோர்க்கிறது

## பாதிக்கப்பட்ட 2,00,000இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது




டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC ஸ்ரீ லங்கா ஆகியன கூட்டாக ஆரம்பித்த மனிதநேய ஒன்றிணைவு நிவாரண திட்டத்தில் இணைந்துகொண்ட CBL குழுமம் Citi Bank, Sunshine Holdings PLC, Huawei Technologies Lanka Co மற்றும் Unilever ஆகிய பெருநிறுவன கூட்டுறவாளர்கள் வரிசையில் London Stock Exchange (லண்டன் பங்குச்சந்தை) குழுமமும் முழு சமுதாயத்திற்கும் தம் சார்பாகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் நோக்கில் இந்நிவாரணப் பணியில் கைகோர்த்துள்ளது.

தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாக நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த 2,00,000இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்கும் நோக்கில் மனிதநேய ஒன்றிணைவு திட்டத்தின் மூலம் 25 மாவட்டங்களிலும் அவசரகால நிவாரணங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதுடன் இதுவரை 1,15,000இற்கும் மேற்பட்ட ஆதரவற்ற குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டுள்ளது. பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை மேற்படி மனிதநேய ஒன்றிணைவு நிவாரண வேலைத்திட்டமானது தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2022இற்கான விற்பனை மாநாட்டில் மிகச்சிறந்த செயற்திறனாளர்களைப் பாராட்டிக் கௌரவித்திருந்த AIA இன்ஷூரன்ஸ்!



இலங்கையின் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி வழங்குநராக (2021இல் கெப்பிடல் பைனான்ஸ் இன்டர்நெஷனல் மற்றும் 2019, 2020இற்காக குளோபல் பேங்கிங் என்ட் பைனான்ஸ் நிறுவனங்களால்) கௌரவிக்கப்பட்டுள்ள AIA அண்மையில் BMICHஇல் இடம்பெற்ற AIA விற்பனை மாநாட்டில் தனது மிகச்சிறந்த வெல்த் பிளேனர்களைப் பாராட்டிக் கௌரவித்திருந்தது. அலைக்கு எதிராக எனும் கருப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வானது AIA வெல்த் பிளேனர்களின் மிகச்சிறந்த மற்றும் குறிப்பிடும்படியான செயற்திறனைப் பதிவுசெய்வதற்கு அவர்களுக்கு உதவியிருந்த அவர்களின் ஆர்வம் மற்றும் விடாமுயற்சியினைப் பறைசாற்றும் விதமான அவர்களின் அதிசிறந்த வருடாந்த செயற்திறனைக் கௌரவித்திருந்தது. AIA இன் வாடிக்கையாளர்கள் ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளுடனும் மிகச்சிறந்த வாழ்க்கையினை வாழ்வதற்கு உதவுவதாக அவர்களின் வாக்குறுதியின் நிஜமான தூதுவர்களாக இருந்ததற்காக செயற்திறனாளர்கள் இவ்வாறு பாராட்டிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிகழ்வில் AIA இன் பிரதான நிறைவேற்று அதிகாரி சத்துரி முனவீர, பிரதிப் பிரதான நிறைவேற்று அதிகாரி உபுல் விஜேசிங்க, AIA குழுமத்தின் பிராந்திய விநியோக அதிகாரி கெல்வின் ஃபூ, AIA இன் சிரேஷ்ட நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் முகவர் நிறுவனச் செயற்பாட்டு அணிகளுடன் நாடு முழுவதிலுமிருந்து வெல்த் பிளேனர்கள் மற்றும் வெல்த் பிளேனர்களின் முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# AFI Corp – iWill நவம்பர் 13ஆம் திகதியன்று இலவச மனநல வெபினாரை நடத்தவுள்ளது

தொழில்நுட்பத் தீர்வுகள் நிறுவனமாகிய ஏஎவ்ஐ கோர்ப் (AFI Corp) 2022 நவம்பர் 13ஆம் திகதியன்று ஸூம் வழியாக ஒரு மனநல வெபினாரை நடத்தவுள்ளது. இந்த வெபினார் தமிழில் நடத்தப்படுவதுடன், அனைத்து பொதுமக்களுக்கும் இலவசமாக திறந்திருக்கும். மன ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அனைவரின் மன ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான ஆதரவை வழங்குவதற்காக ஏஎவ்ஐ கோர்ப் (AFI Corp) வழக்கமாக மனநலச் செயலமர்வுகள் மற்றும் வெபினார்களை நடத்துகிறது. 2021ஆம் ஆண்டில், ஏஎவ்ஐ கோர்ப் (AFI Corp) உலகின் முதல் கட்டமைக்கப்பட்ட சிகிச்சை செயலியாகிய ஐவில் (iWill)ஐ இலங்கையில் அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் அனைத்துத் தரப்பு மக்களும் மனநலப் பாதுகாப்பை தங்கள் வீடுகளில் இருந்தே முழுமையான தனிப்பட்ட தன்மையுடன் அனுபவிக்க முடியும். மனச்சோர்வு, பதற்றம் மற்றும் பிற மனநல அழுத்தங்களைச் சமாளிக்க மக்களுக்கு உதவுவதற்கு மனநல நிபுணர்களால் ஒரு மெய்நிகர் சிகிச்சை செயலியாகிய ஐவில் (iWill) வடிவமைக்கப்பட்டது.

மனநலக் கவலைகள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதிகரித்து வருவதையடுத்து, இச்செயலியானது இலவசமாகப் பதிவிறக்கம் செய்யக் கிடைப்பதுடன், பயனர்கள் மனநலத் தற்காப்புகளைப் பின்பற்றி, அவர்களால் முடிந்தளவு சிறந்த நிலையை அடைய உதவும்.இதில் பங்கேற்பதற்கு ஆர்வமுள்ளவர்கள்: பின்வரும் இணைப்பில் பதிவுசெய்துகொள்ளலாம்.

https://us06web.zoom.us/webinar/register/WN_PxSabkolR3uelw-q_9bOQg

## அகதிகள் முகாமில் பிறந்து ஆஸி. அணியில்
# இடம்பிடித்த அவெர் மாபில்



(ரமணி)

கட்டாருக்குச் செல்லும் அவுஸ்திரேலிய உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்த இளம் வீரர் அவெர் மாபில். காடிஸுக்காக லா லிகாவில் விளையாடும் 27 வயதான அவர் தான் எங்கிருந்து வந்தார் என்பதை ஒருபோதும் மறக்கவில்லை. கென்யாவிலுள்ள அகதிகள் முகாமில் பிறந்தவர் மாபில். அவரது பெற்றோர் சூடானில் மோதலால் பாதிக்கப்பட்டவர்கள்.

"நான் ஒரு குடிசையில் பிறந்தேன், அதுவும் ஒரு சிறிய குடிசையில். எனது ஹோட்டல் அறை நிச்சயமாக அந்தக் குடிசையை விட பெரியது. அந்த அகதி முகாமில் நாங்கள் குடும்பமாக இருந்த அறை" என்று அவர் கூறினார். "அவுஸ்திரேலியா எங்களை அழைத்துச் சென்று மீளக் குடியமர்த்த, அது எனக்கும் எனது உடன்பிறந்தவர்களுக்கும் எனது முழுக் குடும்பத்திற்கும் வாழ்வில் ஒரு வாய்ப்பைக் கொடுத்தது. அந்த வாய்ப்புக்காக அவுஸ்திரேலியாவுக்கு நன்றி தெரிவிக்கிறேன். அவர்கள் என் குடும்பத்தை அனுமதித்துள்ளனர்" என்றார்.

2006இல் அவுஸ்திரேலியாவில் குடியமர்த்தப்பட்ட பிறகு, அவரது மாமாவின் உதவியுடன், அவர் தனது உதைபந்தாட்டத்தை ஏ-லீக் கிளப்பான அடிலெய்டு யுனைடெட்டில் சேரும் அளவுக்கு வளர்த்து, 17 வயது மற்றும் 118 நாட்களில் அவர்களின் இளைய அறிமுக வீரர்களில் ஒருவரானார்.

## நடப்பு சம்பியன் ஆஸி.யின் வெளியேற்றத்திற்கு
# காரணம் என்ன?

(ஏ.அகீல் சிஹாப்)

ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் சுப்பர் 12 சுற்றுப் போட்டிகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்தன. அதன்படி முதல் அரையிறுதி ஆட்டம் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகின்ற நிலையில், சுப்பர் 12 சுற்றில் குழு ஒன்றில் இடம்பெற்ற அணிகளுக்கிடையில் நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றன.

நியூசிலாந்து அணி முன்னதாகவே அயர்லாந்து அணியை வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்கான வாய்ப்பை உறுதி செய்திருந்த நிலையில், அடுத்த இடத்திற்கு அவுஸ்திரேலியாவா, இங்கிலாந்தா என்ற போட்டியில் இங்கிலாந்து அணி இலங்கை அணியை வீழ்த்தி அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது. அவுஸ்திரேலிய அணி இறுதியாக மோதிய போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியுடன் வெற்றி பெற்றதை தொடர்ந்து, இலங்கை அணி அரையிறுதிக்கு செல்லும் வாய்ப்பை இழந்தது.

அதன் பின்னர் இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான தீர்மானமிக்க போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றால் இங்கிலாந்து அணியும் இலங்கை அணி வெற்றி பெற்றால் அவுஸ்திரேலிய அணியும் அரையிறுதிக்கு தகுதிபெறும் நிலை காணப்பட்ட நிலையில், இலங்கை அணியை வீழ்த்திய இங்கிலாந்து அணி அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்தது.

குழு ஒன்றின் புள்ளிப் பட்டியலில் நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய அணிகள் தலா 7 புள்ளிகள் பெற்று முதல் மூன்று இடங்களை பிடித்தன. இதில் நெட் ரன்ரேட் அடிப்படையில் நியூசிலாந்து அணி முதலிடத்தையும், இங்கிலாந்து அணி இரண்டாமிடத்தையும் அவுஸ்திரேலிய அணி மூன்றாமிடத்தையும் பெற்றன. ஆஸி. அணி தங்களது முதல் ஆட்டத்தில் நியூசிலாந்து அணியுடன் படுதோல்வி அடைந்தமையே அந்த அணியின் நெட் ரன்ரேட் மறை பெறுமானத்தை அடைவதற்கும், அரையிறுதிக்கு தகுதிபெறாமல் வெளியேறுவதற்கும் மிகப்பெரிய காரணமாக அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## தென்னாபிரிக்காவுக்கு அதிர்ச்சியளித்து வீட்டுக்கு அனுப்பிய நெதர்லாந்து

தென்னாபிரிக்க அணியுடனான தீர்மானமிக்க ஆட்டத்தில் நெதர்லாந்து அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தென்னாபிரிக்க அணிக்கு அதிர்ச்சியளித்தது. இந்தத் தோல்வியின் மூலம் தென்னாபிரிக்க அணி அரையிறுதிக்கு தகுதிபெறும் வாய்ப்பை இழந்தது. அரையிறுதிக்கு தகுதிபெறும் என எதிர்பார்க்கப்பட்ட அணியான தென்னாபிரிக்க அணியை நெதர்லாந்து அணி வீட்டுக்கு அனுப்பியது.

தங்களது முதல் 3 போட்டிகள் நிறைவில் இரு வெற்றிகளைக் குவித்த தென்னாபிரிக்க அணி, பாகிஸ்தான் மற்றும் நெதர்லாந்து அணிகளுடன் அதிர்ச்சித் தோல்வியடைந்து அரையிறுதி வாய்ப்பை இழந்தது. குறித்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங்களை குவித்தது.

இதையடுத்து 159 ஓட்டங்களை இலக்காக கொண்டு பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 145 ஓட்டங்களையே பெற்றது. இந்தத் தோல்வியின் மூலம் இந்திய அணி அரையிறுதி சுற்றுக்கு தானாக தகுதிபெற்றது.



## கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை
# ஆசிரியர் அணி வெற்றி

(நிந்தவூர் நிருபர்)

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மற்றும் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி ஆகிய இரு பாடசாலைகளின் ஆசிரியர் அணிகளுக்கிடையே அண்மையில் நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில், இரு போட்டிகளிலும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆசிரியர் அணியினர் அபார வெற்றியைப் பெற்றுக்கொண்டனர்.

முதல் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கார்மேல் பற்றிமா கல்லூரி அணியினர் 35 ஓட்டங்களை பெற்றனர். 36 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய உவெஸ்லி உயர்தர பாடசாலை அணியினர் 4.2 ஓவர்களில் இலகுவாக வெற்றி இலக்கை அடைந்தனர்.

இரண்டாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய உவெஸ்லி உயர்தர பாடசாலை அணியினர் 50 ஓட்டங்களை பெற்றனர். எனினும், கார்மேல் பற்றிமா கல்லூரி அணியினர் 5 ஓவர்கள் முடிவில் 36 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதால் 14 ஓட்டங்களினால் உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆசிரியர் அணியினர் அபார வெற்றியைப் பெற்றுக்கொண்டனர்.



## நியூசிலாந்து – பாக்., இந்தியா – இங்கிலாந்து அணிகள்
# அரையிறுதியில் மோதல்




எட்டாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரின் சுப்பர் 12 சுற்றுப் போட்டிகள் அனைத்தும் நேற்று நிறைவுக்கு வந்ததன் அடிப்படையில் குழு ஒன்றிலிருந்து நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகளும், குழு இரண்டிலிருந்து இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகளும் அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றன.

குழு 1 இலிருந்து முன்னதாக நியூஸிலாந்து, இங்கிலாந்து அணிகள் அரையிறுதிக்குத் தெரிவான நிலையில், குழு 2 இலிருந்து யார் யார் அரையிறுதிக்குத் தெரிவாகுவது என்பதை தீர்மானிக்கின்ற முக்கியமான மூன்று போட்டிகள் நேற்றைய தினம் நடைபெற்றிருந்தன. இதில் முதலில் நடைபெற்ற போட்டியில் தென்னாபிரிக்க அணி நெதர்லாந்து அணியுடன் அதிர்ச்சித் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, மறுமுனையில் பாகிஸ்தான் அணி பங்களா தேஷ் அணியை வீழ்த்தியது. இதனைத் தொடர்ந்து இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் அரையிறுதி ஆட்டத்திற்கு தெரிவாகின.

அந்த வகையில் புதன்கிழமை சிட்னியில் நடைபெறும் முதலாவது அரையிறுதிப் போட்டியில் நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தும் நிலையில், வியாழக்கிழமை நடைபெறுகின்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.




## தனுஷ்க குற்றவாளியானால் 14 ஆண்டுகள் சிறை!

பாலியல் குற்றச்சாட்டின் அடிப்படையில் நேற்று அவுஸ்திரேலியாவின் சிட்னியில் வைத்து கைதுசெய்யப்பட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலக்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்பட்டு, அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்படும் பட்சத்தில், 14 ஆண்டுகள் வரை அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

29 வயதுடைய அவுஸ்திரேலிய நாட்டை சேர்ந்த பெண்ணொருவர், தனுஷ்க குணதிலக்க அனுமதியின்றி தன்னுடன் உடலுறவு கொண்டதாக குறித்த நான்கு குற்றச்சாட்டுகளை சிட்னி நகர பொலிஸாரிடம் முன்வைத்தார். அதனடிப்படையிலேயே இலங்கை அணி தங்கியிருந்த ஹோட்டலில் வைத்து தனுஷ்க குணதிலக்க நேற்று கைதுசெய்யப்பட்டார். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட தனுஷ்க குணதிலக்க, சிட்னி பொலிஸாரினால் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், குற்றச்சாட்டுகளை ஆராய்ந்த நீதிபதி அவருக்குப் பிணை வழங்க மறுப்பு தெரிவித்தார்.

மேலும், இன்றைய தினம் அவரை மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## சம்மாந்துறை எஸ்.எஸ்.சி. கழகத்துக்கு கடினபந்து கிரிக்கெட் உபகரணம் வழங்கிவைப்பு







(ஏ.அகீல் சிஹாப்)

சம்மாந்துறை மண்ணில் மாத்திரமல்லாது, முழு அம்பாறை மாவட்டத்திலும் கடினபந்து கிரிக்கெட் விளையாட்டில் பிரபல அணியாகத் திகழ்ந்துவரும் சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்திற்கான (எஸ்.எஸ்.சி.) கடினபந்து கிரிக்கெட் உபகரணம் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அதன் செயலாளர் அஜ்வத் ஆசிரியரின் தலைமையில் நடைபெற்றது.

சம்மாந்துறை விளையாட்டுக்கழக முகாமையாளரினால் சமூக சேவையாளரும் விஞ்ஞான முதுமாணியுமான அஸ்மி யாஸீனிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய கடினபந்து கிரிக்கெட் விளையாட்டுக்குத் தேவையான கால் பாதுகாப்பு அங்கிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சமூக சேவையாளரும் விஞ்ஞான முதுமாணியுமான அஸ்மி யாஸீன் கலந்துகொண்டு குறித்த உபகரணத்தை விளையாட்டுக் கழகத்திடம் வழங்கிவைத்தார். மேலும், விளையாட்டுக் கழக நிர்வாகிகள், கழக வீரர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் எனப் பலரும் இதன்போது கலந்துகொண்டனர்.

# ஓட்டமாவடி - பாலைநகர் விபத்தில் மனைவி பலி; கணவர் படுகாயம்!




(மீராவோடை நிருபர்)

மோட்டார்சைக்கிள் - படி ரக வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலைநகர் பிரதான வீதியில் வைத்தே இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் (5) இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பகுதியிலுள்ள மகளின் வீட்டுக்கு சென்றுவிட்டு பாலைநகரிலுள்ள தனது வீட்டுக்கு கணவன் - மனைவி இருவரும் மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, பின்னால் வந்த படி ரக வாகனம் மோதியதில் மனைவி உயிரிழந்துள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் உயிரிழந்தவர் பாலை நகர் பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயான 46 வயதுடைய உசனார் ஆமினா உம்மா என்பவர் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் உடல் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்தில் படுகாயமடைந்த கணவர் ஆதம் பாவா உசனார் அதே வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் படி ரக வாகன சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தடுப்பூசிகள் ஏற்றிய பின்னரும் மாடுகளுக்கு வாயால் நுரை வெளியேறி சுவாசிக்க முடியாது இறப்பு

## மட்டு. கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களில் சுமார் 800இற்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டதாக மட்டு. மாவட்டத்திலுள்ள கால்நடை வளர்ப்பாளர் கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாட்களாக மாடுகளுக்கு ஏற்பட்ட நோய் காரணமாக தினமும் 10 மாடுகள் வீதம் 800இற்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்த நிலையில், வயல்வெளி, குளம், காடு மற்றும் மேய்ச்சல்தரை போன்ற பகுதிகளில் மீட்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட சித்தாண்டி மற்றும் கிரான் கால்நடை திணைக்களப் பிரிவுகளான சந்தனமடு ஆற்றுப்பகுதியை அண்டிய பகுதியான சித்தாண்டி 4ஆம் பிரிவு, ஈரளக்குளம், ஆலையடி, சேரடி, வேறம் பெரியவெட்டை, வட்டுவான், வெள்ளாமைச்சேனை, கூளாவடி, கோரவெளி, மாதந்தனை, மயிலந்தனை மேச்சல்தரை போன்ற பிரதேசங்களில் ஒரு வயது தொடக்கம் ஒன்றரை வயது வரையிலானதும் கர்ப்பிணி மாடுகள், எருமை மாடுகள் மற்றும் பசு மாடுகளும் இந்நோய்த் தாக்கத்தினால் உயிரிழந்து வருகின்றன.

மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோயின் தாக்கத்தின் காரணமாக சுவாசிக்க முடியாது மாரடைப்பால் இறந்து வருவதாகக் கூறிய கால்நடை திணைக்கள அதிகாரிகள், அதற்கான தடுப்பூசி மருந்துகளையும் ஏற்றிவருகின்றனர். இவ்வாறு தடுப்பூசிகள் ஏற்றிய பின்னரும், மாடுகளுக்கு வாயால் நுரை வெளியேறி மூக்கால் சுவாசிக்க முடியாது இறந்துவருவதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு மாடுகள் உயிரிழப்பதால் தாம் பலத்த நஷ்டம் அடைந்துள்ளதாகவும் முதலில் உயிருடன் இருக்கின்ற மாடுகளைக் காப்பற்ற அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் பாதிக்கப்பட்ட மாடு வளர்ப்போருக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்கவேண்டும் என கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு வினைத்திறனை அதிகரிப்பது தொடர்பில் கல்முனை மாநகர சபையில் கலந்துரையாடல்





(சாய்ந்தமருது நிருபர்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) கீழ் இலங்கை தொழிலாளர் சம்மேளனத்தின் (EFC) ஏற்பாட்டில் உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை மாற்றுத்திறனாளிகளுக்கு இலகுவாக வழங்குவதற்கான வினைத்திறனை அதிகரிப்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் (05) மாலை கல்முனை மாநகர சபையில் நடைபெற்றது.

மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் மற்றும் ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி ஆகியோரின் வழிகாட்டலில் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேற்படி சம்மேளனத்தின் விசேட பயிற்சி மற்றும் மாற்றுத்திறனாளிகள் வள நிலைய முகாமையாளர் தேசபந்து மெனிக் குணரட்ன வளவாளராக கலந்துகொண்டிருந்தார்.

இதில் மாநகர சபையின் கணக்காளர் கே.எம்.றியாஸ், பொறியியலாளர் ஏ.ஜே.ஹலீம் ஜெளஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், நிர்வாக உத்தியோகத்தர் எம்.அப்துர் ரஹீம், உள்ளூராட்சி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.நௌசாத் ஆகியோரும் மாற்றுத் திறனாளிகள் சங்கங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கி வருகின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு, அவர்களது கருத்து'கள் கேட்டறியப்பட்டதுடன், அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் வளவாளரால் விபரிக்கப்பட்டன.

அத்துடன், கல்முனை மாநகர சபையுடன் தொடர்புடைய சேவைகளை மாற்றுத்திறனாளிகள் இலகுவாக பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

குறிப்பாக, வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கும் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் இலகு வழியில் வாய்ப்பளித்தல், நூலக சேவை, வீதி புனரமைப்பு, தெரு விளக்கு பராமரிப்பு போன்ற சேவைகளை வழங்குவதில் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமையளித்தல் என பல்வேறு விடயங்கள் குறித்து இதன்போது வழிகாட்டல் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

எதிர்காலங்களில் கல்முனை மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களில் மாற்றுத்திறனாளிகளை இணைத்துக்கொள்வது தொடர்பிலும் கருத்துகள் பரிமாறப்பட்டன.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# இளம் பிக்குகள் பாலியல் துஷ்பிரயோக வழக்கு; மதகுருவின் பிணை தளர்வு கோரிக்கை நிராகரிப்பு!

(பாறுக் ஷிஹான்)

இளம் பிக்குகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு பல நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்ட பிரதம பௌத்த மதகுருவின் பிணை நிபந்தனை தளர்வு கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, மீண்டும் குறித்த வழக்கை எதிர்வரும் டிசம்பர் மாதம் 06ஆம் திகதிவரை மறு விசாரணைக்காக ஒத்திவைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விகாரை ஒன்றில் வைத்து 3 இளம் பிக்குகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பிலான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை (04) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், இரு தரப்பினர் சார்பிலும் ஆஜரான சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்கள், விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு, மருத்துவ அறிக்கை மன்றிற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக எதிர்வரும் டிசம்பர் மாதம் 06ஆம் திகதிவரை மறுவிசாரணைக்காக குறித்த வழக்கை கல்முனை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம், சடயந்தலாவை பகுதி ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 இளம் பிக்குகள் கல்முனை பகுதி விகாரை ஒன்றில் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் ஒன்றின் அடிப்படையில் செப்டெம்பர் 13ஆம் திகதி கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதியாக ரண்முத்துகல சங்கரத்ன தேரர் என்றழைக்கப்படும் பிரதான பௌத்த மதகுரு, அம்பாறை மாவட்ட சிறுவர் பெண்கள் விசேட பிரிவினரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டு, கல்முனை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

இதனடிப்படையில் கல்முனை நீதிமன்ற நீதிவான் கைதான சந்தேகநபரான பௌத்த மதகுரு தொடர்புபட்ட 3 வழக்குகளில் தலா 3 பேர் வீதம் 9 பேர் கொண்ட 5 இலட்சம் பெறுமதியான சரீரப்பிணையில் செல்லவேண்டும், மாதத்தின் 4 வாரம் வரும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அருகிலுள்ள கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையொப்பம் இடுதல், குறித்த வழக்கின் சாட்சிகள் குடும்பத்தினரை அச்சுறுத்துதல், வழக்கு தொடர்பிலான தலையீடு செய்யாதிருத்தல் வேண்டும். வெளிநாடு செல்வதற்குத் தடை, அதாவது கடவுச்சீட்டினை மன்றிற்கு ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறு தன்னிடம் கடவுச்சீட்டு இல்லையெனின் உரிய தரப்பினர் உறுதிப்படுத்தி மன்றிற்கு தெரிவிக்கவேண்டும். கிராமசேவகரின் நலச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற கடும் நிபந்தனையுடன் குறித்த பௌத்த மதகுரு பிணையில் விடுவித்து உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை (04) இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது மருத்துவ அறிக்கை மற்றும் வழக்கின் விசாரணை தொடர்பில் இரு தரப்பினர் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்கள், விண்ணப்பங்கள் ஆராயப்பட்டதுடன், சந்தேகநபரான தேரரின் பிணை நிபந்தனை தளர்வு கோரிக்கை நிராகரிக்கப்பட்டு மீண்டும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 06ஆம் திகதிவரை வழக்கினை நீதிவான் ஒத்திவைக்க உத்தரவிட்டார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் ஓட்டமாவடியில் ஒருவர் கைது







(மீராவோடை நிருபர்)

ஐஸ் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த 28 வயதுடைய இளைஞரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காகித ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, கதிரவெளி விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஓட்டமாவடி - அறபா நகர் பகுதியில் 16 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் குறித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர் கொழும்பு பகுதியிலிருந்து மொத்தமாக போதைப்பொருட்களை பெற்று கல்குடா பகுதியில் நீண்டகாலமாக விற்பனைசெய்து வந்துள்ளார் என்று விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து விலையுயர்ந்த மோட்டார்சைக்கிள் ஒன்றும் ஒரு தொகைப் பணமும் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட போதைப்பொருள் வியாபாரியை நீதிமன்றில் ஆஜர்படுத்த வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அருட்தந்தை வெபர் அடிகளாரின் திருவுருவச்சிலை மட்டக்களப்பில் திறப்பு



(வெல்லாவெளி நிருபர்)

அருட்தந்தை ஹரல்ட் ஜோன் வெபர் அடிகளாரின் உருவச்சிலை மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (04) மாலை மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அருட்தந்தை ஹரல்ட் ஜோன் வெபர் அடிகளாரினால் சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி மற்றும் விளையாட்டுத்துறையைக் கட்டியெழுப்புவதிலும் அயராது முயற்சிசெய்து கிழக்கு மாகாணத்தின் கல்வித்துறையை மேம்படுத்தி இருக்கின்றார் என்பது எல்லோராலும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆரம்ப காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு பெரும் குறையாக இருந்த மைதானத்தை அமைப்பதில் பெரும் பங்காற்றி, தனது அயராத முயற்சியினால் சதுப்பு நிலமாக இருந்த குறித்த 9 ஏக்கர் நிலத்தை தினமும் துப்புரவுசெய்து வெபர் மைதானத்தை உருவாக்கிய பெருமை இவருக்கு இருக்கின்ற காரணத்தினால் மட்டக்களப்பு மாநகர சபையினர் ஏகோபித்த தீர்மானத்திற்கிணங்க இவ்வாறு சிலை அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

அமெரிக்காவில் 20 பெப்ரவரி 1914 பிறந்த அடிகளார், தனது இறுதி மூச்சு வரை மட்டக்களப்பு மண்ணிற்காக பெரும் சேவையாற்றி 1998 ஏப்ரல் 14 திகதி இறைவனடி சேர்ந்தார்.

இவ்வாறு மாவட்டத்திற்கு பல்வேறு துறைசார்ந்து சேவையாற்றிய வெபர் அடிகளாரின் திருவுருவச் சிலை திறப்பு விழாவிற்கு பிரதம அதிதிகளாக மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை, கருணாகரன், மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை ஆகியோர் கலந்துகொண்டு அடிகளாரின் திருவுருவச்சிலையினை திரைநீக்கம் செய்து, மெழுகுவர்த்தி ஏற்றியும், இறை ஆசியுடன் திறந்துவைக்கப்பட்டது.

# லொறியுடன் மோதி சைக்கிள் விபத்து

## புல்மோட்டையில் ஒருவர் பலி



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - புல்மோட்டை பிரதான வீதி சலப்பையாறு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 46 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து நேற்று முன்தினம் (05) பிற்பகல் இடம்பெற்றுள்ளது. பொலன்னறுவையிலிருந்து ஹாட்வெயார் பொருட்களை ஏற்றிவந்த லொறி, சைக்கிளில் பயணித்தவருடன் மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்விபத்தின்போது சலப்பையாறு, இரணைக்கேணி இரண்டாம் வட்டாரத்தில் வசித்துவந்த கைலாயபிள்ளை பஞ்சலிங்கம் (46 வயது) என்பவரே உயிரிழந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் தற்பொழுது குச்சவெளி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துடன் தொடர்புடைய சாரதியை கைதுசெய்துள்ளதுடன், விபத்து தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# திருமலையில் வீடு புகுந்து கைபேசி திருட்டு

## சந்தேகநபர்கள் இருவர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, ரொட்டவெவ பகுதியில் வீட்டின் கூரைமேல் ஏறி கையடக்கத் தொலைபேசியை திருடி விற்பனைசெய்த சந்தேக நபரொருவரையும், அதனை வாங்கிய குற்றச்சாட்டின்பேரில் மற்றுமொரு சந்தேக நபரொருவரையும் கைதுசெய்துள்ளனர்.

ரொட்டவெவ பகுதியில் தனிமையாக வாழ்ந்து வந்த பெண்ணொருவரின் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான கைபேசியை வீட்டின் கூரை மேல் ஏறி திருடிச்சென்ற சம்பவம் தொடர்பில் கடந்த பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி மொரவெவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இம்முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட மொரவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த சந்ரலால் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த கையடக்கத் தொலைபேசி திருடப்பட்டு கிண்ணியா பகுதியில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து குறித்த கையடக்கத் தொலைபேசியை 6000 ரூபாவுக்கு பெற்றுக்கொண்ட சந்தேகநபரை நேற்று முன்தினம் (06) கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் கிண்ணியா மஹ்ரூப் நகர் பகுதியைச் சேர்ந்த எம்.எஸ்.முகம்மட் நவாஸ் (37 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், வீட்டின் கூரை மேல் ஏறி கையடக்கத் தொலைபேசியை திருடிய பிரதான சந்தேக நபரான கிண்ணியாவை பிறப்பிடமாகவும், ரொட்டவெவயை வசிப்பிடமாகவும் கொண்ட றஹ்மத்துல்லா முகம்மட் சுபியான் (23 வயது) என்பவரை கைதுசெய்துள்ளதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபர்கள் இருவரையும் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# போடியார் புலம்பல்!



*உள்ளூராட்சி எல்லை நிர்ணயம் தொடர்பாக ஆராய இன்னும் ஒரு குழு முன்னாள் தேர்தல் ஆணையாளர் தலைமையில் பிரதமர் அமைச்சிருக்காரு எலுவா?*

*அப்ப உள்ளூராட்சித் தேர்தல் இந்த நாளையில நடத்தாம இழுத்தடிக்கிறத்துக்கான ஒரு தந்திரம் எண்டத விளங்கினால் சரிதாம் !*

*தேர்தலுக்கு பயப்படுற ஆட்சியாளர்களால எப்படிடாப்பா ஜனநாயகத்த எதிர்பார்க்க முடியும்..?*

# கஞ்சா - ஐஸ் போதைப்பொருளுடன் வாகரையில் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாரை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் (5) இரவு பொலிஸ் நிலையத்தில் வைத்து கைதுசெய்துள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வருவதாக மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரை கண்காணித்துவந்துள்ள நிலையில் சம்பவதினமான நேற்று முன்தினம் (05) இரவு கடமையை முடித்துவிட்டு பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேறியபோது அவரிடமிருந்து கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருளை மீட்டதுடன், அவரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர் 23 வயதுடைய மஹியங்கனை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் இவர் போதைக்கு அடிமையாகியுள்ளார் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# உலக செய்திகள்



# நான்கு தோட்டாக்கள் என் வலது காலைத் துளைத்தன

## "என்னை கொல்ல தீட்டப்பட்ட சதித்திட்டத்துக்கான வீடியோ ஆதாரம் என்னிடம் உள்ளது; உயிருக்குப் பாதகம் ஏற்பட்டால் அது வெளியிடப்படும்"






துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து காயத்துடன் உயிர் தப்பிய பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், தம்மைக் கொல்ல நான்கு பேர் இரகசியமாக சதி செய்ததாகவும் அதற்கான வீடியோ ஆதாரம் தம்மிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளதுடன், தமது உயிருக்குப் பாதகம் ஏற்பட்டால் அந்த வீடியோ வெளியிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மருத்துவமனையிலிருந்து முதன்முறையாக நாட்டு மக்களுக்கு உரையாற்றிய இம்ரான் கான்,

"எனது வலது காலில் 4 குண்டுகள் துளைத்தன. என்னை கொல்ல திட்டமிட்டிருப்பதாக ஒருநாளைக்கு முன்பாகவே எனக்குத் தகவல் கிடைத்தது. என்னை சுடுவதற்கு 2 பேர் வந்திருந்தனர். மற்றொருவனும் சுட்டிருந்தால், நான் உயிர் தப்பியிருக்க மாட்டேன். இது திட்டமிட்டு நடந்த சதி. இதுபற்றி ஆதாரங்களுடன் விளக்குவேன்" என தெரிவித்தார்.

பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் அரசுக்கு எதிராக பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திலிருந்து தலைநகர் இஸ்லாமாபாத் நோக்கி கடந்த வியாழக்கிழமை நீண்ட பேரணி நடத்த முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பிடிஐ கட்சி திட்டமிட்டிருந்தது. இதில் பங்கேற்க குஜ்ரன்வாலா பகுதிக்குச் சென்ற இம்ரான் கான், தொண்டர்கள் மத்தியில் உரையாற்ற லொறி மீது ஏறினார்.

**ஒருவர் உயிரிழப்பு; 13 பேர் காயம்**

அப்போது கூட்டத்தில் மறைந்திருந்த ஒருவர் இம்ரான் கான் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினார். இதில் இம்ரான் கானின் வலது காலில் குண்டுகள் பாய்ந்தன. இந்த துப்பாக்கிச்சூட்டில் தொண்டர் ஒருவர் உயிரிழந்ததுடன், 13 பேர் காயமடைந்தனர்.

இதனையடுத்து உடனடியாக இம்ரான் கான் லாகூரிலுள்ள சவுகத் கானும் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். அங்கு அவருக்கு 2 மணிநேரம் அறுவை சிகிச்சை இடம்பெற்று காலில் இருந்த தோட்டாக்கள் அகற்றப்பட்டன.

இந்நிலையில், இம்ரான் கான் விரைவில் டிஸ்சார்ஜ் செய்யப்படுவார் என அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவக் குழுவின் தலைவர் டொக்டர் பைசல் சுல்தான் தெரிவித்துள்ளார்.

இம்ரான் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதைக் கண்டித்து, நாடு முழுவதும் அவரது கட்சியினர் போராட்டம் நடத்தினர். இந்நிலையில், இம்ரானை சுட்ட நவேத், வாக்குமூலம் அளிக்கும் வீடியோ சமூக வலைத்தளத்தில் வெளியானது. இதுதொடர்பாக சில பொலிஸ் அதிகாரிகள் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடத்தியவரிடம் உயர்நிலைக் குழு விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. துப்பாக்கியால் சுட்டவரிடம் பொலிஸார் தொடர்ந்தும் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

**கொரிய தீபகற்பத்தில் போர்ப் பதற்றம்:**

## ஒரே நேரத்தில் 180 போர் விமானங்களை பறக்கவிட்ட வடகொரியா; சுற்றிவளைத்த தென்கொரியா



ஒரே நேரத்தில் வடகொரியாவின் 180 போர் விமானங்கள், நாட்டின் தெற்கு மற்றும் வடக்கு கடலோரப் பகுதிகளில் பறந்ததால் பதற்றம் அதிகரித்துள்ளது.

இதுகுறித்து தென்கொரிய இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வடகொரிய போர் விமானங்கள் பறந்து சென்றமை கண்டறியப்பட்டதால், அதனை எதிர்கொள்வதற்காக அதிநவீன எவ்-35ஏ வகை போர் விமானங்கள் உட்பட 80 விமானங்களுடன் துரத்திச் சென்றதாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க - தென்கொரிய கூட்டு இராணுவப் பயிற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சரமாரியாக ஏவுகணைகளை வீசி வடகொரியா சோதனை நடத்தி வருகிறது.


**மேலும் 4 பொலிஸ்ரிக் ஏவுகணைகளை ஏவிய வடகொரியா**

வடகொரியாவை அச்சுறுத்தும் விதமாக அமெரிக்கா இரண்டு B-1B சூப்பர்சோனிக் குண்டுவீச்சு விமானங்களை பயிற்சியில் ஈடுபடுத்தியது.

அமெரிக்கா - தென்கொரியா இடையேயான கூட்டு இராணுவப் பயிற்சியின் இறுதிநாளான நேற்றுமுன்தினம் வடகொரியா மேலும் 4 பொலிஸ்ரிக் ஏவுகணைகளை ஏவியுள்ளது.

வடகொரியா வீசிய ஏவுகணைகள் மேற்கு கடற்பகுதியை நோக்கிச் சென்றதாக தென்கொரிய கூட்டுப் படைத் தலைவர்கள் தெரிவித்தனர்.

# கென்யாவில் கடும் வறட்சி: 205 யானைகள் உயிரிழப்பு



கென்யாவில் நிலவும் கடும் வறட்சியால் 205 யானைகள் உயிரிழந்துள்ளன.

40 ஆண்டுகளில் இல்லாதளவிற்கு கென்யாவில் வறட்சி நிலவுவதால் அங்கு அம்போசெலி, சம்புரு மற்றும் டைட்டா டிவிட்டா உள்ளிட்ட பகுதிகளிலுள்ள காடுகளில் நீர் வற்றியுள்ளது. இதனால் யானை உள்ளிட்ட விலங்குகள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளன.

இதன்படி கடந்த 9 மாதங்களில் இதுவரை 205 யானைகள் உயிரிழந்துள்ளன என கென்யா அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இறந்த குட்டியை தாய் யானை பரிதவிப்போடு பார்க்கும் காட்சி, எழுந்து நிற்க முடியாத யானையை வனத்துறையினர் கயிறு கட்டி இழுத்தபோதும் அந்த யானை நிலைகுலைந்து கீழே விழுவது, இறந்து கிடக்கும் யானைகள் குறித்த காட்சிகள் வெளியாகியுள்ளன.

காட்டுப் பகுதியில் விலங்குகளுக்குத் தண்ணீர், உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கென்ய அரசு தெரிவித்துள்ளது. மேலும், கென்யாவில் யானைகள் மட்டுமல்லாமல் 14 வகையான உயிரினங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு உயிரிழப்பதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. கடந்த ஒன்பது மாதங்களில் 512 காட்டெருமைகள், 381 பொதுவான வரிக்குதிரைகள், 51 எருமைகள், 49 வரிக்குதிரைகள் மற்றும் 12 ஒட்டகச்சிவிங்கிகள் இறந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அகதிகளாக இலங்கையர்கள் 10 பேர் தமிழகத்தில் தஞ்சம்



**(மன்னார் நிருபர்)**

இலங்கையிலிருந்து மேலும் 10 பேர் அகதிகளாக தனுஷ்கோடிக்குச் சென்றுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம்முதல் இதுவரை 198 இலங்கையர்கள் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜஸ்டின், அவரது மனைவி அனுஷ்யா மற்றும் அவரது மூன்று மாத குழந்தை, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயக்குமார், அவரது மனைவி யோகேஸ்வரி, அவரது இரு மகள்கள் மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த புஷ்பம் மற்றும் அவரது மகன் பிரபாகரன் உட்பட மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் வெள்ளிக்கிழமை (04ஆம் திகதி) இரவு மன்னாரிலிருந்து படகு மூலம் புறப்பட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை (5) அதிகாலை ஒரு மணியளவில் நடுதிட்டு பகுதியை அடைந்துள்ளனர்.

தகவலறிந்த இராமேஸ்வரம் மெரைன் பொலிஸார், இலங்கைத் தமிழர்களை மீட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்குப் பின் 10 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் தற்போது தஞ்சமடைந்துள்ள 10 பேரில் ஒருவரான அனுசியா என்பவர் தெரிவிக்கையில்,

"பொருளாதார நெருக்கடியால் உணவு உள்ளிட்ட பொருட்களை வாங்க முடியாமல் சிரமப்பட்டோம். அதனால் தமிழகம் வந்தோம். எங்கள் நான்கு பேரையும் படகில் அழைத்து வர ரூ.1.50 இலட்சம் கொடுத்தோம்" என்றார்.

# ராஜானா சும்மாவா?



பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவையடுத்து அரச பொறுப்பை அவரது மூத்த மகன் சார்ள்ஸ் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இதன்மூலம் பிரிட்டனின் மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் என அவர் அறிவிக்கப்பட்டுள்ளார். சார்ள்ஸ் மன்னரானதும், அவரிடமுள்ள பழக்கங்களை அறிந்துகொள்ள பலரும் விரும்பினர். அவர் குறித்து சேகரிக்கப்பட்ட சில சுவையான தகவல்கள் உங்களுக்காக;

★ மன்னர் சார்ள்ஸுக்கு காலை உணவில் நிச்சயம் வீட்டில் தயாரான ரொட்டி, ஒரு கிண்ணம் நிறைய வெட்டப்பட்ட பழங்கள், புது பழச்சாறுகள் இருக்கவேண்டும்.

★ உலகம் சுற்றப்போனாலும், இவை அடங்கிய காலை உணவு பெட்டி அவருடனேயே செல்லுமாம்.

★ சார்ள்ஸ் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவருடைய படுக்கை, வீட்டு உபயோகg; பொருட்கள், சுவரில் மாட்டியிருக்கும் ஓவியங்கள், புகைப்படங்களும் செல்லுமாம். அவருக்கு தூக்கம் வரவழைக்க இவை அவசியமாம்.

★ பாலுடன் சேர்த்து கொறிக்கும் தானிய மணிகள், உலர்ந்த கொட்டைகள், பழங்கள் கலந்த கலவையையும் எடுத்துச் செல்வாராம்.



★ மதிய உணவு சாப்பிட மாட்டார். மாறாக, 12 மணிவரை வேலை செய்துவிட்டு நடப்பார். அடுத்த ஒரு மணிநேர இடைவெளியில் டீ, இரண்டு ரொட்டித் துண்டுகளுக்கு இடையே வைக்கப்பட்ட இறைச்சி அல்லது வெஜிடபிள் கலவை சேர்த்த சன்ட்விச் சாப்பிடுவார். அத்துடன், கேக் போன்றவையும் சில சமயம் சாப்பிடுவார். இந்த சமயத்தில் அவர் மனைவி கமிலாவும் கூடவே இருப்பார்.

★ சாப்பிட்ட பின், வெது வெதுன்னு இருக்கும் பாலாடை கட்டி மற்றும் பிஸ்கெட்டுகளை விரும்பி சாப்பிடுவாராம்.

★ இரவு 8.30 மணிக்கு உணவு. இரவு 11.00 மணிக்கு அலுவலக அறைக்குச் சென்று வேலை செய்த பின்னர், நடு இரவுக்குப் பின்தான் தூங்கச் செல்வாராம்.

★ குளிக்கும் டப்பில் பாதிதான் தண்ணீர் நிரம்ப வேண்டும்; அதுவும் வெது வெதுப்பாக இருக்கவேண்டுமாம்.

★ தினமும் காலையில் டூத் பிரஷ்ஷில் ஓர் அங்குல நீளத்துக்கு பேஸ்ட்டை வைத்து தேய்ப்பாராம்.

★ செல்லும் இடங்களுக்கு எப்போதும், 'கிலினாக்ஸ்' நிறுவன வெல்வெட் டொய்லெட் பேப்பர் எடுத்துச் செல்வார்.

★ காலையில் அணியும் ஆடையை தினமும் துவைத்து இஸ்திரி போட்டுத் தர வேண்டும்.

★ ஷூ லேசைக் கூட, இஸ்திரி போட்டுதான் அணிவாராம்.

★ அவருடன் எப்போதும் ஆறு விதமான தேன் செல்லுமாம்.

★ சாப்பாட்டுக்கு என்னென்ன தயார் செய்ய வேண்டும் என்பதை முன்கூட்டியே தெளிவாகக் கூறிவிடுவார்.

***(ராஜான்னா, சும்மாவா... என்று சொல்ல தோன்றுகிறதா?)***

# செல்போனை காட்டச் சொல்லி அடம்பிடித்த மங்களம்



தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில், ஆதிகும்பேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான மங்களம் என்ற யானை, செல்போன் பார்க்க அடம்பிடிப்பது அக்கோயிலுக்கு வரும் பக்தர்களைக் கவர்ந்துள்ளது.

56 வயதான மங்களம், தனது பாகன் அசோக்குமாருடன் பாசமாக விளையாடுவது, கொஞ்சிப் பேசுவது அனைவரும் ரசிக்கும் வகையில் இருக்கிறது.

அந்தவகையில் தற்போது, தனது பாகன் செல்போன் பார்த்தால், அதனை தன்னிடம் காட்ட வேண்டும் என அடம்பிடித்து குறும்பு செய்யும் வீடியோ இணையத்தளங்களில் வைரலாகியுள்ளது. கோயிலுக்கு வருவோரையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது.

இதுகுறித்து யானைப் பாகன் அசோக் குமார் (வயது 50) தெரிவிக்கையில்,

நான் பாடசாலைக்குச் செல்லும் போதிருந்தே இந்த யானையுடன் பழகி வந்தேன். பல நாட்கள் பாடசாலைக்குக் கூட செல்லாமல் யானையை நீராட வைப்பது, அலங்காரம் செய்வது போன்ற வேலைகளைச் செய்து வந்தேன். இதனால், யானையும் என்னுடன் பாசமாக பழகத் தொடங்கியது.

நான் கோயிலுக்குள் நுழையும்போது என்னைப் பார்த்து மெல்லிய குரலில் பிளிறும். அருகில் சென்றவுடன், நான் அதற்கு முத்தம் கொடுத்து, மலையாளத்தில், "அம்மு, எப்படி இருக்கிறாய், நலமா? சாப்பிட்டாயா?" எனக் கேட்டவுடன், என் அருகில் குனிந்து மெல்லிய பிளிறலுடன் பதில் கூறும். பின்னர், நடனமாடி தனது சந்தோஷத்தை வெளிக்காட்டும்.

மேலும், என்னை தனது கால்களுக்கு இடையில் வைத்துக்கொண்டு கொஞ்சும். அப்போது நான் அதன் கால்களைத் தடவிவிட்டால்தான், அந்த இடத்தைவிட்டு நகரும். நான் வெளியூர் செல்வதாக இருந்தால், மங்களத்திடம் தகவல் கூறிவிட்டுத்தான் செல்வேன். ஊருக்குச் சென்றுவிட்டு திரும்பிவரும்போது, என்னை உச்சிமுகர்ந்து, பாசத்தை வெளிக்காட்டும்.

யானைக்கு மஞ்சள் தூள், மிளகு, சீரகம், நெய், பனை வெல்லம் கலந்த 8 கிலோ எடையுள்ள சாதம், 250 கிலோ எடையுள்ள ஆல, அரசு, அத்தி இலைகள், சோளத்தட்டை, தென்னை மட்டைகள் போன்ற இயற்கை உணவுகள் தினமும் 2 வேளை வழங்கப்படுகிறது - என்றார் அசோக்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7